வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 15.09.2021 புதன்கிழமை | இதழ் : 284 | பக்கங்கள் : 16

# வெளியக பொறிமுறையை இலங்கை நிராகரிக்கிறது!



## வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு

- 46/1 தீர்மானம் எமது சமூகத்தை துருவப்படுத்தும்
- விரைவில் மாகாண சபை தேர்தலை நடத்துவோம்
- பயங்கரவாத சட்ட மறுபரிசீலனை முடிவு விரைவில்
- பொறுப்புக்கூறலில் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவோம்
- பேரவை ஸ்தாபக கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும்!
- ஜனநாயக மரபில் உறுதியாக உள்ளோம்

கொழும்பு, செப்ரெம்பர் 15

46/1 தீர்மானத்தால் நிறுவப்பட்ட வெளியக பொறிமுறை முயற்சிகளுக்கான எந்தவொரு முன்மொழிவையும் நாங்கள் நிராகரிக்கிறோம். அதேநேரம், சம்பந்தப்பட்ட விடயங்களில் உள்ளக செயன்முறைகள் கையாளப்படுகின்றன.

தீர்மானம் 30/1இனால் நாங்கள் அனுபவித்தபடி இது (46/1) இலங்கை சமூகத்தை துருவப்படுத்தும். மனித உரிமைகள் பேரவை அதன் ஸ்தாபக கொள்கைகளை கடைப்பிடிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட நாட்டின் ஒத்துழைப்பு இல்லாமல் ஏற்படுத்தப்பட்ட வெளியக பொறிமுறைகளால் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைய முடியாது. அத்துடன், அதில் அரசியல் மயப்படுவதற்கான வாய்ப்புகளும் காணப்படும்.

- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் காணொலி பதிவு மூலம் ஐக்கிய நாடுகள் (ஐ. நா.) மனித உரிமைகள் பேரவைக்கு பதிலளித்துள்ளார்.

15

## ஆணையாளரின் அறிக்கையை வரவேற்கின்றது பிரிட்டன்

கொழும்பு, செப் 15

ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளரால் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் நேற்று முன்தினம் முன்வைத்த வாய்மொழி மூல அறிக்கையை பிரிட்டன் வழிமொழிவதாக இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் தெரிவித்

15

## தமிழர் முகம்கொடுக்கும் பல விடயங்கள் ஆணையாளரின் அறிக்கையில் இல்லை!

### விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 15

"தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் பல விடயங்கள் பற்றி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர் ஸ்தானிகர் மிச்செல் பச்லெட் தனது உரையில் குறிப்பிடவில்லை என்பது மனவருத்தத்தைத் தரு கின்றது" என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தா னிகர் தமது வாய்மொழி அறிக்கையை வெளியிட்டுள்ளார். அதனை எப்படிப்

15

## இலங்கை தமிழ் பெண்மணி நோர்வேயில் எம்.பியாக தெரிவு



ஒஸ்லோ, செப். 15

நோர்வேயில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பாராளுமன்ற தேர்தலில், இலங்கை தமிழரான ஹம்ஸி குணரட்ணம் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மூன்று வயதில் தனது பெற்றோருடன் நோர்வேக்கு அகதியாக வந்த ஹம்ஸி (ஹம்சாயினி), தமிழ் இளையோர் அமைப்பில் இணைந்து அரசியலுக்கு

15

## 136 பேர் மரணம்

கொழும்பு, செப். 15

நாட்டில் கொரோனா தொற்றால் மேலும் 136 மரணங்கள் பதிவாகியுள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்த்தன உறுதிப்படுத்தி

15

## யாழ்.மாவட்டத்தில் 36 பேர் உட்பட வடக்கில் 59 பேருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், செப். 15

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவியில் 14 பேர், யாழ்.மாவட்டத்தில் 36 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று 59 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்திய சாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரி

15

## அநுராதபுரம் சிறைக்குள் நுழைந்த இராஜாங்க அமைச்சர் தமிழ் அரசியல் கைதிகளை மண்டியிட வைத்து மிரட்டல்!

### கஜேந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 15

அனுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்த தமிழ் அரசியல் கைதிகளை வரவழைத்து, அவர்களில் இருவரை மண்டியிடச் செய்து, துப்பாக்கியை காட்டி அச்சுறுத்தியுள்ளார் என்று பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அவர் தனது ருவிட்டரில் இந்த தகவலை

15

## யாழ்.பல்கலை பட்டமளிப்பு விழா ஒக்ரோபர் 7,8,9ஆம் திகதிகளில்

### ஊரடங்கு நிலைமை நீடித்தால் நிகழ்நிலையில் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப். 15

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி, எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 07ஆம், 08ஆம், 09ஆம் திகதிகளில், பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

15




உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

யாழ்ப்பாணம் பூநகரி வீதியால் செல்கின்ற நேரத்தில் எல்லாம் மறவன்புலவை திரும்பிப் பார்ப்பதுண்டு.

அங்கு இரண்டு விடயங்கள் கவனத்தை ஈர்க்கும். ஒன்று மறவன்புலவு சச்சிதானந்தம் ஐயாவின் வீடு. மற்றையது அவர் வீட்டுக்கு முன்னால் கட்டிக் கொண்டிருந்த தூபி ஒன்று.

எதற்காக அவர் தனிஒருவனாக அதனைக் கட்டிக் கொண்டிருக்கிறார் என்று அதனைக் காணுகின்ற போதெல்லாம் நினைப்பதுண்டு.

அது ஏதோ சைவ அடையாளம் ஆக இருக்கலாம் என்றும் நினைத்துக்கொண்டு கைகளை குவிக்கவும் தவறுவதில்லை.

அவரின் காணியில் அவர் கட்டிய அந்தத் தூபி இப்போது பலரின் கவனத்தையும் பெற்றிருக்கின்றது. முக்கியமாக அரச படையினர், புலனாய்வாளர்களின் கவனத்தைத் திருப்பியிருக்கின்றது.

அந்தத் தூபிக்கு அடியில், தென்மராட்சியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட முப்பத்திரண்டு பேரின் பெயர்களை மிக அழகாக நினைவுக்கற்களில் பெயர்களை எழுதி பதித்திருக்கிறார் மறவன்புலவு. அதனால்தான் அண்மைய நாட்களில் அவர் வீட்டுக்கு பொலிஸாரும் மற்றும் படை அதிகாரிகளும் சென்று வருகின்றனர்.

அது அவரின் சொந்தக் காணி. அதில் அவர் கற்களைப் பதிக்க முயல்வது அவரின் உரிமை. அதனை யாராலும் தடுக்கமுடியவில்லை.

ஒரு நாள் அவரிடமிருந்து ஒரு குறுந்தகவல் வந்தது.

“தென்மராட்சி தெற்கில் காணாமல்போனவர்கள் 32பேர் எனக் கல்வெட்டாகப் பதிந்தேன். பயங்கரவாத ஆய்வுத்துறை, படைப்பிரிவின் புலனாய்வுத் துறை இருவரும் என்னிடம் ஒவ்வொரு பெயராகக் கூறி அவர்களைப் பற்றிய விவரங்களை கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். என்னிடம் படங்களும் தகவல்களும் உள்ளன. கேட்கக் கேட்க ஒவ்வொன்றாக கொடுத்துக் கொண்டிருக்கின்றேன்.” இதுவே அவரது குறுந்தகவல்.

மறவன்புலவு சச்சிதானந்தம் ஐயா பற்றி இந்தப் பத்தியில் ஏற்கனவே ஒருதடவை குறிப்பிட்டிருந்தேன். சச்சிதானந்தம் ஐயா பற்றிய அவரின் அரசியல் நிலைப்பாடு தொடர்பாக பலரும் விமர்சனங்களை முன்வைப்பதுண்டு.

அவர் மத ரீதியாக தமிழ்மக்களை பிரிக்கப் பார்க்கிறார் என்று சிலர் கூறுகின்றபோது, தனது மதம் பாதிக்கப்படுகின்றபோது அதுவும் மற்றொரு மதப் பிரிவினரால் பாதிக்கப்படுகின்றபோது அதற்காக குரல்கொடுக்கவேண்டியதில் தவறிருப்பதாக தெரியவில்லை என்றும் சிலர் வாதிடுவதுண்டு.

நமது அரசியல் தலைவர்கள், சிங்கள - பௌத்த மதத்தினரால் சைவமதம் பாதிக்கப்படுகின்றபோது மாத்திரமே பொங்கி எழுவதுண்டு. ஆனால், சச்சிதானந்தம் அப்படியல்ல. எந்த மதத்தினரால் சைவர்களுக்கு பாதிப்பு வந்தாலும் தட்டிக்கேட்கிறார்.

அவரின் இந்த அரசியல் சர்ச்சைக்கு அப்பால் அவர்போல ஒரு துடிதுடிப்பான செயல்வீரரை நம்மத்தியில் தேடிப்பிடிக்கவேண்டும்.

தமிழர் அரசு என்று நாம் கொண்டாடிய வடக்கு மாகாண சபையை தமிழர்கள் ஆட்சி செய்தபோது செய்திருக்கவேண்டியவை பல.

அதிகம் ஏன்? மேற்கு மாகாண சபைக்கான மீன்பிடி சட்டமூலத்தை அப்போதைய ஆளுநர் யோகேஸ்வரனின் வேண்டுகோளின் பேரில் தயாரித்து கொடுத்தவர் இந்த சச்சிதானந்தம்.

ஆனால், அவரை நமது வடக்கு மாகாண சபை கண்டுகொள்ளவே இல்லை.

இப்போது தனி மனிதனாக இருந்து அவர் செய்திருப்பதை மாகாண அரசு நினைத்திருந்தால், இன்னும் சிறப்பாக செய்து முடித்திருக்கலாம். நல்லாட்சி அரசு அதற்கு தடையாகவும் இருந்திருக்காது. நமது தலைவர்கள் தாங்கள் செய்துகாட்டவேண்டும் அல்லது, மற்றவர்கள் செய்ய இடம்விட்டு ஒதுங்கவேண்டும் என்று சொல்வதைத் தவிர, வேறு ஒன்றும் சொல்ல முடியவில்லை.!

**- ஊர்க்குருவி**

# தொற்றிலிருந்து நாடு விடுபடுவதற்கு பேதங்களை மறந்து செயல்படுவோம்!

### யாழ். வந்த ஞானசார தேரர் அழைப்பு

*யாழ்ப்பாணம், செப். 15*

இன, மத வேறுபாடு இன்றி அனைவரும் கொரோனா தொற்றில் இருந்து விடுபட வேண்டியே யாழ்ப்பாணத்தில் சிறப்பு பூசை வழிபாட்டில் பங்கேற்றார் என்று கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.



பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் நேற்று நடைபெற்ற விசேட பூசை வழிபாட்டில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“நாங்கள் ஓர் எதிர்பார்ப்போடு இங்கு வந்திருக்கின்றோம். தற்போதைய நிலைமை அனைவருக்கும் தெரிந்த விடயம். இலங்கையில் மட்டுமல்ல உலகம் முழுவதும் கொரோனா நோய் தாக்கத்தால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்

சிலர் நோயால் பாதிக்கப்பட்டு கஷ்டப்படுகிறார்கள். அது சிங்களவராக இருக்கட்டும் தமிழராய் இருக்கட்டும், எந்த இனத்தவராயினும் அனைத்து இனத்தை சேர்ந்தவர்களும் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். சிலர் ஒருநேர உணவுக்குக்கூட வழியில்லாமல் உள்ளார்கள். இதேபோல் சிலருக்கு வேலையில்லா பிரச்னை காணப்படுகின்றது. அத்துடன், இந்த நோய் தொற்றுக்கு உள்ளானோர் சிகிச்சை பெறுவதற்கு அவதிப்படுகிறார்கள். எந்த இனத்தவராக இருந்தாலும் பிரசனையில்லை அனைத்து இன மக்களும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

கடவுள் மீதுள்ள நம்பிக்கையின் காரணமாக குறிப்பாக, பௌத்த மதத்தில் நாம் பின்பற்றும் ஒரு விதி முறையைபோல இந்து மதத்தில் உள்ள ஆகம விதி முறையை இணைத்து இந்த தொற்றில் இருந்து நாடு விடுபட கடவுளிடம் வேண்டி ஒரு விசேட பிரார்த்தனை மேற்கொண்டுள்ளோம். தற்பொழுது பௌத்தம், இந்து, இஸ்லாம் என்ற பேதங்களை மறந்து அனைவரும் இணைந்து இந்த கொரோனா நோயிலிருந்து விடுபடுவதற் காக ஒன்றுபட்டு செயல்பட வேண்டும் - என்றார். (ஐ-3)

# கிளிநொச்சி மருத்துவமனைக்கு உபகரணங்கள்

*கிளிநொச்சி, செப். 15*

வடபிராந்திய தேவசபைகள் சங்கத்தால் தொடர்பாடல் உபகரணங்கள் மருத்துவமனைக்கு நேற்று கையளிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையிலுள்ள கொரோனா விடுதியில் தொடர்பாடலை இலகுபடுத்தவிற்காக வட பிராந்திய தேவ சபைகள் சங்கத்தால் இதற்கான நிதி கையளிக்கப்பட்டது.

சிகிச்சை பெறும் நோயாளர்கள், ஊழியர்களின் தொடர்பாடல் வசதிக்காகவும், தொற்று அபாயத்தை குறைக்கும் வகையிலும் இந்தத் தொடர்பாடல் சாதனம் உதவியாக அமையவுள்ளது. இந்த வசதி ஏற்படுத்தி கொடுக்கப்பட்ட நிலையில் இதற்கான நிதி நேற்று மருத்துவ மனை பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டது. (ஐ)

## கல்வி TV CHANNEL-1

**15.09.2021**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

## கல்வி TV CHANNEL - 2

**15.09.2021**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
15.09.2021 புதன்கிழமை
பிலவ வருடம், ஆவணி 30

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## அரசாங்கத்தின் உள்ளக பொறிமுறை?

வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் உள்ளக பொறிமுறையின் மூலம் பிரச்னைகளை தீர்க்கவுள்ளதாகவும், வெளியாரின் தலையீடுகளை அரசாங்கம் புறக்கணிப்பதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார். 2015இல், ரணில் - மைத்திரி அரசாங்கம் உள்ளக பொறிமுறை மூலம் பிரச்னையை தீர்ப்பதாகத் தெரிவித்து, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கை ஊட்டும் வகையில், இலங்கையின்மீதான பிரேரணைக்கு இணையனுசரணை வழங்கி, பொறுப்புக்கூறலை ஏற்றுக்கொண்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ரணில் - மைத்திரி அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கியிருந்தது. ஆனால், தற்போதைய நிலைமைகள் அப்படியில்லை.

கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் இலங்கை மீதான தீர்மானத்தை முற்றிலுமாக நிராகரித்திருக்கின்றது. அதேவேளை, முன்னைய ஆட்சியின்போது கைது செய்யப்பட்ட அனைத்து படைத் தரப்பினரையும் விடுதலை செய்திருக்கின்றது. முக்கியமாக, 11 இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டிருந்த கடற்படை தளபதி, கரன்னகொடவை விடுதலை செய்திருக்கின்றது. அந்த வழக்கை மேற்கொண்டு விசாரணை செய்யப் போவதில்லை. இந்த விடயங்கள், அரசாங்கம் மனித உரிமைகள் மீறல் விவகாரத்தில் காத்திரமான எந்தவொரு நடவடிக்கையையும் காண்பிக்கப் போவதில்லை என்பதைத் தெளிவாக எடுத்துரைக்கின்றது. இந்த நிலையில் பீரிஸ் கூறும் உள்ளக பொறிமுறைமீது எந்த அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்கள் நம்பிக்கை வைக்க முடியும்?

அதேவேளை சிங்கள - பௌத்தர்களை திருப்திப்படுத்துவதில் மட்டும் அதிக நாட்டம் கொண்டிருக்கும் அரசாங்கம், சிங்கள- பௌத்தர்களின் மனம் புண்படாமலேயே அனைத்து விடயங்களையும் செய்ய முற்படுகின்றது. நாட்டின் ஜனாதிபதி தன்னை வெளிப்படையாகவே, சிங்கள - பௌத்த தலைவன் என பிரகடனம் செய்திருக்கின்றார். தங்களின் அரசியல் அதிகாரத்திற்கு தடையான எந்தவொரு விடயத்தையும் இந்த அரசாங்கம் செய்யப் போவதில்லை. இதுவரையான அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அவ்வாறுதான் அமைந்திருக்கின்றன. இந்த நிலையில் ஜீ. எல். பீரிஸ் எப்படியானதோர் உள்ளக பொறிமுறை தொடர்பில் பேச முற்படுகின்றார்? பீரிஸ் போன்றவர்கள் சொந்த முடிவுகளின் அடிப்படையில் செயல்படும் வல்லமையற்றவர்கள். ராஜபக்ஷக்கள் எவ்வாறானதொரு முடிவை எடுக்கின்றார்களோ, அதனை மனப்பாடம் செய்து, ஒப்புவிக்கும் நிலையிலேயே ஏனையவர்கள் இருக்கின்றனர்.

உள்ளக பொறிமுறையை முறையாக முன்னெடுக்க வேண்டுமாயின் பாதிக்கப்பட்ட மக்கள் அரசாங்கத்தை முழுமையாக நம்ப வேண்டும். அவர்கள் தங்களை நம்பும் வகையில் அரசாங்கம் செயல்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை எனின், உள்ளக பொறிமுறை ஒருபோதுமே வெற்றியளிக்காது.

உள்ளக பொறிமுறை தொடர்பில் பேசும் ஜீ. எல். பீரிஸ்டன்தான், அண்மையில் சுமந்திரன் பேசியிருந்தார். பீரிஸ் கூறும் உள்ளக பொறிமுறை தொடர்பில், கூட்டமைப்பின் - தமிழ் அரசு கட்சியின் ஒரு பிரிவினர் நம்பிக்கை கொண்டிருக்கின்றனரா? சம்பந்தன், சுமந்திரன் அணியை பொறுத்தவரையில், பொறுப்புக்கூறலை பலியிட்டு, அரசியல் தீர்வைப் பெறுவதற்கு வாய்ப்பு கிடைக்குமானால், அவர்கள் நிச்சயம் அதனை செய்வார்கள்.

கடந்த ஆட்சிக் காலத்திலும் அவ்வாறானதோர் அணுகுமுறையுடன் தான், அவர்கள் நடந்துகொண்டனர். உணமையில் புதியதோர் அரசியல் யாப்பு வந்திருக்குமானால் அதன் பின்னர், சம்பந்தன் - சுமந்திரன் அணி, நிச்சயம் பொறுப்புக்கூறல் விடயத்தில் உதட்டளவில் மட்டும்தான் நாட்டம் செலுத்தியிருக்கும். இந்த ஆட்சியிலும், புதிய அரசியல் யாப்பு தொடர்பான அவாவுடன்தான் சம்பந்தன் இருக்கின்றார். ஆனால், தன்னையொரு பௌத்த - சிங்கள தலைவன் என்று கூறும் ஒருவர் எப்படியானதோர் அரசியல் யாப்பு தொடர்பில் கரிசனை கொண்டிருப்பார்?

# பச்லெட்டின் பார்வை!

- அலசுவது **இராஜதந்திரி** -



*ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் மிச்செல் பச்லெட் இலங்கை குறித்த தமது வாய்மூல அறிக்கையை விரிவான முறையில் வெளியிட்டுள்ளார்.*

*மிச்செல் பச்லேட் அணுகியுள்ள விடயங்கள் வெறுமனே வடக்கு - கிழக்கு சார்ந்தவையாக மட்டும் காணப்படவில்லை. தென்னிலங்கையில் அரசு எதேச்சதிகாரமாகக் கையாள்கின்ற விடயங்கள் குறித்தும் ஐ. நா. மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் தமது கரிசனையை வெளிப்படுத்தியுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.*

*ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் தென்னிலங்கையில் அரசின் எதேச்சதிகாரமான போக்குக் குறித்து தெரிவித்தவற்றில் சக பாராளுமன்ற உறுப்பினரான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவை பட்டப்பகல் வேளை கொலை செய்து பின்னர் நீதிமன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுதலை செய்தமை முக்கியமான விடயமாகும். அத்துடன் கொழும்பில் 2008ஆம் மற்றும் 2009ஆம் ஆண்டுக்கு உட்பட்ட காலப்பகுதியில் காணாமல் ஆக்கப்பட்ட பதினொரு பேர் தொடர்பாக முன்னாள் கடற்படை தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட மீது தொடரப்பட்ட வழக்கு கைவிடப்பட்டமை குறித்தும் மிச்செல் பச்லெட் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

*மேற்குறிப்பிட்ட இரு விடயங்கள உட்பட காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்த அலுவலகத்தின் நடவடிக்கைளில் காணப்படுகின்ற அசமந்தப்போக்கு குறித்தும் மிச்செல் பச்லெட் தமது வாய்மூல அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.*

**பொறுப்புக்கூறல்**

*மிச்செல் பச்லெட்டின் அறிக்கையில் குறிப்பிடத்தக்களவு இலங்கை அரசு ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக்கு இத்தடவை அனுப்பி வைத்திருந்த அறிக்கையில் காணப்பட்ட விடயங்களையும் உள்ளடக்கியனவாக இருந்ததோடு பொறுப்புக்கூறல் தொடர்பாக இலங்கை அரசுடன் ஈடுபாட்டுடன் செயல்பட தயாராக இருப்பதாகவும் மிச்செல் பச்லெட் தெரிவித்திருந்தார்.*

*பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கை அரசுடன் இணைந்து செயல்படும் விருப்பத்தை மிச்செல் பச்லெட் தெரிவித்திருக்கலாம். ஆனால், மறுபுறத்தே பச்லெட்டின் எதிர்பார்ப்புக்கு அமைவாக எவ்வளவு தூரம் இலங்கை அரசு ஒத்துழைக்கும் என்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.*

*ஏற்கனவே, பொறுப்புக்கூறல் தொடர்பாக இலங்கை அரசு பொறுப்பற்ற விதத்தில் இருந்து வருவதையே அவதானிக்க முடிகின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் மிச்செல் பச்லெட்டின் இலங்கை தொடர்பான அறிக்கையைப் பார்க்கும்போது சில விடயங்களில் பச்லெட் அம்மையார் இலங்கை அரசு மீது நம்பிக்கை கொண்டுள்ளதையும் அறிய முடிகின்றது. ஆனால், மிச்செல் பச்லெட் அம்மையார் தமக்கு முன்பிருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளர்கள் இலங்கை தொடர்பாக குறிப்பிட்டிருந்தவற்றையும் கவனத்தில் கொள்ள வேண்டியவராகின்றார்.*

**ஆதாரங்கள்**

*இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக இதுவரை ஒரு இலட்சத்து இருபதினாயிரம் ஆதாரங்கள் தமது அலுவலகத்திடமிருப்பதாக மிச்செல் பச்லெட் குறிப்பிட்டுள்ளதோடு மேலும் ஆதாரங்களை தமது அலுவலகம் திரட்டுவதில் ஆர்வமாக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.*

*மிச்செல் பச்லெட் குறிப்பிட்ட ஆதாரங்களை மேலும் சேகரிக்கும் நடவடிக்கையே ஒரு குழப்பத்தை ஏற்படுத்தும் கருத்தாக இருக்கின்றது. ஏனெனில், வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற மனித உரிமைகள் தொடர்பாகவும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாகவும் கடந்த காலங்களில் அமைக்கப்பட்டிருந்த ஆணைக்குழுக்களால் சமர்பிக்கப்பட்ட இறுதி அறிக்கைகளில் நிறையவே ஆதாரங்கள் காண்படுகின்றன.*

*எனவே, ஆதாரங்களை சேகரிப்பது தொடர்பாக மிச்செல் பச்லெட் வீண் கால தாமதங்களை தவிர்த்து உரிய வகையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மூலமாக இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதே மிச்செல் பச்லெட் அம்மையாரின் அலுவலகத்தின் தலையாய கடமையாக வேண்டியதாகின்றது.*

*வடக்கு - கிழக்கு மக்கள் பலதரப்பட்ட அடிப்படை மனித உரிமைகள் மீறல்களுக்கு முகம் கொடுத்த நிலையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மூலமாக தமக்கு நீதி கிடைக்கும் என்றே எதிர் பார்க்கின்றனர். இந்த எதிர்பார்ப்புகள் தொடர்பாக மிச்செல் பச்லெட் அம்மையாரின் ஜெனிவா அலுவலகம் தடம்புரண்டு விடக்கூடாதென்பதே வடக்கு - கிழக்கு மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**

பலநாளாக எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கும். நண்பர் ஒருவருக்கு உதவுவீர்கள். தடை, தாமதங்கள் நீங்கும். வாழ்க்கைத் துணைக்கு சாதகமான விஷயங்கள் நடக்கும்.

**இடபம்**

உங்கள் முயற்சியால் நண்பரின் பிரச்னை தீரும். உற்றார், உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பணவரவு சுமாராக இருக்கும். பதற்றம் குறையும்.

**மிதுனம்**

புதிய வியாபாரத்தில் ஈடுபடும் முயற்சி தாமதமாகும். கவனமுடன் செயல்பட வேண்டிய நாள். பயம் குறையும். எதிலும் சிறப்பாக செயல்பட்டு வெற்றி காண்பீர்கள்.

**கடகம்**

குழப்பங்களும் மனப்பாரமும் தீரும். நிம்மதியான நாள். பணத்தேவைகள் எதிர்பார்த்தபடியே இருக்கும். உணவில் கவனம் தேவை. புதிய வீடு வாங்கும் முயற்சியில் முன்னேற்றம் ஏற்படும்.

**சிம்மம்**

பாதியில் நின்ற பணி ஒன்று தொடரும். நிம்மதி மீளும். நண்பரின் உதவியால் பிரச்னை ஒன்று முடிவுக்கு வரும். புதிய தொழில், வியாபார வாய்ப்பு ஒன்று தேடி வரும்.

**கன்னி**

பதவி உயர்வு கிடைக்கும். பணியாளருக்கு பொறுப்புகள் கூடும். தொழில், வியாபாரத்தில் இருந்து வந்த போட்டிகள் குறையும். உங்களது திறமைகளை வெளிப்படுத்தி வளர்ச்சி காண்பீர்கள்.

**துலாம்**

வாழ்வு உயரும். சொந்த பந்தங்களால் நன்மை ஏற்படும்.வேறு நிறுவனத்துக்கு மாறும் முயற்சியில் சாதகமான சூழல் நிலவும். தொழில் செய்பவர்களுக்கு பற்றாக்குறை தீரும்.

**விருட்சிகம்**

தொழில் தொடர்பான பல விஷயங்களை கற்றுக் கொள்வீர்கள். பலகால முயற்சி ஒன்று வெற்றி இலக்கை நோக்கி நகரும். வழக்கு போன்றவற்றில் வெற்றி உண்டாகும். இரகசியம் பாதுகாப்பீர்கள்.

**தனுசு**

படிப்பை முடித்து வேலை வாய்ப்புக்கு காத்திருப்போருக்கு நற்செய்தி வரும். வெளிநாடு செல்லும் முயற்சியில் வெற்றி உண்டு. கலைத்துறையினர் புதிய வாய்ப்புகள் கிடைக்கப் பெறுவார்கள்

**மகரம்**

நீங்கள் எடுக்கும் புதிய முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வெற்றி வாய்ப்பை நெருங்கினாலும் சிறு தாமதம் வரும். உறவினர்கள், நண்பர்களின் செயல்கள் மகிழ்ச்சியளிக்கும்

**கும்பம்**

சொத்து சம்பந்தப்பட்ட முயற்சிகள் வெற்றியடையும்.கொடுக்கல், வாங்கல் உங்களுக்குச் சாதகமாக இருக்கும். பற்றாக்குறை நீங்குவதற்கான முயற்சியில் தாமதம் ஏற்படும்.

**மீனம்**

தாய், தந்தையின் உடல்நலம் நன்றாக இருக்கும். வெளியூர், வெளிநாட்டுப் பயணத் திட்டம் ஒன்று உருவாகும். செய்திகளை எதிர்நோக்கியிருப்பவர்களுக்கு நல்ல செய்தி வரும்.

# எழுவரோடு திருச்சி முகாம் தடுப்பிலுள்ள தமிழரையும் விடுதலை செய்ய வேண்டும்

## அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு கௌதமன் கோரிக்கை



சென்னை, செப். 15

"அண்ணா பிறந்தநாளை முன்னிட்டு 700 கைதிகளை விடுதலை செய்யவிருப்பதாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்திருப்பதைத் தமிழ்ப் பேரரசு கட்சி வரவேற்கிறது. மேலும், பேரறிவாளன், முருகன், சாந்தன் உள்ளிட்ட எழுவரோடு திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டிருக்கும் எண்ணற்ற ஈழத் தமிழர்களையும் விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்."

இவ்வாறு தமிழ்ப் பேரரசு கட்சி பொதுச் செயலாளர் வ. கௌதமன் தமிழக முதலமைச்சரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார். இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

"அப்பாவிகளையும், குற்றமற்றவர்களையும், குற்றத்தில் நேரடியாக பங்குபெறாதவர்களையும் கூட இருபது, முப்பது ஆண்டுகள் சிறையில் அடைத்து, அகிம்சை தேசம் இன்னும் கூட அவர்களை விடுதலை செய்யாமலிருப்பது என்பது மனித குலத்திற்கு அறமல்ல. ஆகையினால் 31-ஆவது ஆண்டு சிறைவாசத்தில் வதைபட்டு கிடக்கும் 7 தமிழர்களையும், கடவுச்சீட்டு வழக்கில் கைதாகி 10 மாதங்கள் மட்டுமே தண்டனை அனுபவிக்கக் கூடிய நிலையில், ஈராண்டு, மூன்றாண்டுகள் கடந்தும் கூட திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டிருக்கும் ஈழத்தமிழர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

நேர்மையற்ற முறையில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பைக் குப்பைத் தொட்டியில் வீசிவிட்டு ஜனாதிபதிக்கு எழுவர் விடுதலைக்கான கோப்பை அனுப்பியதை புதிய ஆளுநர் உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும். தமிழ்நாடு அரசின் அதிகாரமிக்க 161ஆவது சட்டப் பிரிவினை பயன்படுத்தி, முதல்வர் ஸ்டாலின் எழுவர் விடுதலையை உறுதி செய்ய வேண்டும். தாமதிக்கப்படும் நீதி அநீதிக்கு சமமானது" எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# 'நீட்' தேர்வு எழுதிய மாணவி தற்கொலை



அரியலூர், செப். 15

தமிழகத்தில் அரியலூர் மாவட்டத்தில் நீட் தேர்வு எழுதிய மாணவி ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

அரியலூர் மாவட்டம் சாத்தம்பாடி கிராமத்தைச் சேர்ந்தவர் கருணாநிதி - ஜெயலட்சுமி தம்பதியினரின் மகள் கனிமொழி (17). பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் 562 மதிப்பெண்கள் பெற்று, பள்ளி அளவில் முதலிடம் பெற்ற மாணவி கனிமொழி, நீட் தேர்வை கடந்த ஞாயிற்றுக்கிழமை எழுதியுள்ளார்.

இந்நிலையில், நீட் தேர்வு கடினமாக இருந்ததால் சரியாக எழுதவில்லை என தந்தையிடம் கூறி மன உளைச்சலில் இருந்த மகள் கனிமொழியை தந்தை தேற்றியுள்ளார். எனினும், மருத்துவக் கனவு நிறைவேறாமல் போய்விடுமோ என்ற அச்சத்தில் நேற்று முன்தினம் இரவு தனிமையில் வீட்டில் இருந்த கனிமொழி வீட்டிலேயே தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

வெளியில் சென்றிருந்த கருணாநிதி மற்றும் ஜெயலட்சுமி வீட்டுக்கு வந்து பார்த்தபோது, கனிமொழி தூக்கில் சடலமாக தொங்கியதை கண்டு அதிர்ச்சியடைந்தனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கருணாநிதி வழக்கறிஞராக உள்ளார். கனிமொழிக்கு உடன்பிறந்த சகோதரி கயல்விழி, பெரம்பலூரில் உள்ள தனியார் கல்லூரியில் நர்சிங் 2ஆம் ஆண்டு பயின்று வருகிறார்.

# இரண்டு கட்டமாக உள்ளூராட்சி தேர்தல் ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறது அ.தி.மு.க

## கள்ள வாக்கு போடும் திட்டம் என்கிறார் ஜெயக்குமார்



சென்னை, செப். 15

"தமிழக உள்ளாட்சித் தேர்தல் இரு கட்டங்களாக நடத்தப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாதது. தி.மு.க. அரசு இத்தேர்தல்களில் தாம் வெற்றி பெறுவதற்காக இவ்வாறு திட்டமிட்டுச் செயற்படுகின்றது" என தமிழக அ.தி.மு.க. அரசின் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்திருக்கின்றார்.

இது தொடர்பாக நேற்று கருத்து வெளியிட்ட அவர், "கடந்த காலங்களில் உள்ளாட்சித் தேர்தல் ஒரே கட்டமாகத்தான் நடந்திருக்கிறது. உள்ளாட்சித் தேர்தல் குறித்து அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றபோது இரண்டு கட்டமாக நடத்தப்படுவது குறித்து பேசப்படவில்லை. ஒரு கட்டமாக நடத்தலாமா இரு கட்டமாக நடத்தலாமா என்று அன்றைக்கு பேசவே இல்லை. அப்படியென்றால் இதை மறைமுக திட்டமாக வைத்து இரகசியமாக வைத்து அறிவித்திருக்கிறார்கள். ஓர் இடத்தில் தேர்தல் நடந்து முடிந்த பிறகு இன்னோர் இடத்தில் ஆட்களைக் கொண்டுவந்து கள்ள வாக்கு போடுவதற்கு வாய்ப்புகள் அதிகரிக்கும்" என்றார்.

ஒரே மாவட்டத்தில் சில ஒன்றியங்களுக்கு முதல் கட்டமாக ஒக்ரோபர் 6 ஆம் திகதியும், மீதியுள்ள ஒன்றியங்களுக்கு ஒக்டோபர் 9 ஆம் திகதியும் தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது வரைக்கும் தமிழ்நாடு வரலாற்றிலும் இந்திய வரலாற்றிலும் கூட உள்ளாட்சித் தேர்தல் இரு கட்டமாக நடத்தப்பட்டதில்லை.

இதுபற்றி தி.மு.க. பிரமுகர்கள் பேசியபோது பெயர் வெளியிட விரும்பாத அவர்கள், "ஒரே மாவட்டத்தில் சில கிலோ மீற்றர்கள் இடைவெளியில் உள்ள பகுதிகளில் கூட இரு கட்டங்களாக தேர்தல் அறிவிக்கப்பட்டிருப்பது தி.மு.கவுக்கு சாதகமான விஷயம்தான். நூறு சதவிகித வெற்றிக்காகத்தான் இந்த இரு கட்டத் தேர்தல்" எனத் தெரிவித்தார்கள்.

# 21 ஆம் திகதிக்கு பின்னர் நாட்டை திறக்க முடியும்

## சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே நம்பிக்கை



**கொழும்பு, செப். 15**

**முடக்கப்பட்டுள்ள நாட்டை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு பின்னர் கட்டம்கட்டமாக திறக்கக்கூடியதாக இருக்கும் என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

"நாட்டில் 4 வாரங்கள் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலில் இருப்பதால் தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் மரண வீதத்தில் சற்று வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அந்தவகையில் 21 ஆம் திகதிக்கு பின்னர் நாட்டை படிமுறை ரீதியில் திறக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும். தடுப்பூசித் திட்டத்தை முன்னெடுப்பதுடன், இதர சுகாதார விடயங்களையும் முறையாக பின்பற்றவேண்டும்." - என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

அதேவேளை, நாட்டில் தற்போதும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். அபாய வலயத்தில் இருந்து மீளவில்லை என சுகாதார தரப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## முதியோர் கொடுப்பனவு வழங்க நடவடிக்கை

கொழும்பு, செப். 15

செப்ரெம்பர் மாதத்துக்கான முதியோர் கொடுப்பனவு எதிர்வரும் 17ஆம், 18 ஆம் திகதிகளில் வழங்கப்படும் என தபால் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டிலுள்ள அனைத்து தபால் நிலையங்களின் ஊடாகவும் ஓய்வூதியக் கொடுப்பனவை பெற்றுக்கொள்ள முடியும் என தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில், வாரத்தில் நான்கு நாட்கள் மாத்திரம் தபால் நிலையங்களை திறக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் கொரோனா நீங்க வேண்டி நேற்று சிறப்பு யாகம்

## ஞானசார தேரரும் பங்கேற்பு





யாழ்ப்பாணம், செப். 15

நாட்டில் கோவிட்-19 நோய்த் தொற்று நிலைமை நீங்கவேண்டி யாழ்ப்பாணத்தில் சிறப்பு யாகம் நேற்று இடம்பெற்றது.

இலங்கையில் உள்ள நான்கு விஷ்ணு ஆலயங்களில் இவ்வாறான வழிபாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்திலும் இந்த வழிபாடு இடம்பெற்றது.

கோவிட்-19 பெருந்தொற்றில் இருந்து விடுபடுவதற்கு பொன்னாலை வரதராஜாப் பெருமான் ஆலயத்தில் நேற்று சிறப்பு யாகம் வளர்க்கப்பட்டு வழிபாடுகள் இடம்பெற்றன.

வரதராஜப் பெருமான் ஆலய முதன்மைக்குரு சோமஸ்கந்த குருக்கள் மற்றும் நயினை நாகதீபம் விகாராதிபதி மீககா வதுலே சிறீ விமல தேரர் ஆகியோர் ஏற்பாடு செய்த இந்த வழிபாட்டில் கலகொட அத்தே ஞானசார தேரர் கலந்துகொண்டார்.

# வலி.வடக்கில் காணி பதிவை உடனடியாக நிறுத்தவேண்டும்

## மீள்குடியேற்ற குழுவின் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 15

வலி.வடக்கில் காணிப் பதிவுகள் மேற்கொள்வதை உடனடியாக நிறுத்துமாறு வலி.வடக்கு மீள்குடியேற்றக் குழுவின் தலைவர் கே.குணபாலசிங்கம் கோரியுள்ளார்.

தற்போது ராணுவத்தின் பிடியில் உள்ள காணிகள் தொடர்பில் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருவது தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 31 வருடங்களாக வலி. வடக்கில் இராணுவத்தினரின் வசம் உள்ள காணிகள் விடுவிக்கப்படவில்லை. அரசாங்கத்தினால் இராணுவம் வசம் காணிகள் உள்ளவர்களைப் பதிவு செய்யுமாறு பல தடவைகள்கோரிக்கை விடப்பட்டு எமது மக்கள் அவ்வாறு பதிவுகளை மேற்கொண் டுள்ளார்கள். ஆனால் இன்று வரை எமது காணிகள் விடுவிக்கப்படவில்லை.

ஏற்கனவே இராணுவத்திடமிருந்து எமது காணியை மீட்பதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்தோம். ஆனால் தற்போது வரை அந்த முயற்சி பயனளிக்கவில்லை. தற்போதைய அரசாங்கத்தினாலும் ஒரு அறிவித்தல்வெளியிடப்பட்டுள்ளது. ராணுவத்திடம் காணிகள் உள்ளோர் பதிவுகளை மேற் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

ஆனால் நாங்கள் அரசிடம் ஒரு கோரிக்கையை முன்வைக்கின்றோம். பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதற்கு இனியும் விவரங்களை சேகரித்துக்கொண்டிருக்க வேண்டாம். ஏற்கனவே பொதுமக்களின் காணி விவரங்கள் தொடர்பில் இராணுவ தளபதி மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எனவே தற்போது இந்த பதிவு நடைமுறையை சற்றுப் பிற்போடுமாறு கோரிக்கை விடுக்கின்றோம்.

இவ்வாறு பதிவுகள் மேற்கொள்ளுமாறு கூறுவதன் காரணமாக பொதுமக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகிறார்கள்.

கடந்த 30 வருடமாக இடம்பெயர்ந்துள்ள மக்கள் யுத்தம் முடிவடைந்த பின்னர் சில பகுதிக் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. ஆனால் பெருமளவு மக்கள் முகாம்களில் அகதிகளாக உள்ளார்கள். சிலர் வாடகைக்கு நண்பர்களின் வீடுகளில் வசித்து வருகின்றனர். மக்கள் தம்மிடம் உள்ள காணி உரித்தின் அடிப்படையிலேயே தமது காணிகளை கோரி நிற்கின்றார்கள். எனவே அரசாங்கம் மக்களுக்குரிய காணிகளை விரைவில் விடுவிப்பு செய்யவேண்டும். மக்கள் கடந்த 30 வருடமாக பெரும் சிரமத்தை எதிர்நோக்கி உள்ளார்கள். எனவே பொதுமக்களின் நலன் சார்ந்து பொதுமக்களின் காணிகளை அரசு கையளிக்க வேண்டும்-என்றார்.

# வன்னி ஹோப் நிறுவனத்தால் மாணவர்களுக்கு ஸ்மார்ட் போன்கள், கணினிகள் வழங்கி வைப்பு



யாழ்ப்பாணம், செப். 15

அவுஸ்ரேலியாவில் இயங்கி வரும் தொண்டு நிறுவனமான வன்னி ஹோப் நிறுவனத்தின் அனுசரணையில் மலையக சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் டிஜிற்றல் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் வறிய மாணவர்களுக்கு ஸ்மார்ட் போன்களும் வளம் குறைந்த பாடசாலைகளுக்கு தலா 5 கணினிகளும் அண்மையில் வழங்கப்பட்டன.

குடத்தனை கரையூர் அ.த.க. பாடசாலை, மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை, புங்குடுதீவு மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு தலா 5 கணினிகளும், சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம், ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் க.பொ.த சாதாரண தர வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஸ்மார்ட் போன்களும் வழங்கப்பட்டன.

கோவிட் பாதுகாப்பு சுகாதார வழிகாட்டலுக்கு அமைய நடைபெற்ற இந்த நிகழ்வுகளுக்கு பிரதம அதிதியாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் கலந்துகொண்டு வழங்கினார்.

# சமையல் எரிவாயு விலை மீண்டும் அதிகரிக்கும்?

சமையல் எரிவாயு விலையை அதிகரிக்குமாறு அந்நிறுவனங்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார். உலக சந்தையில் எரிவாயு விலை சற்று அதிகரித்துள்ளதன் காரண மாக குறித்த நிறுவனங்கள் இவ்வாறு விலை அதிகரிப்பை மேற்கொள் ளுமாறு கோரிக்கை முன்வைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். லாப் சமையல் எரிவாயு விலை அண்மையில் அதிகரிக்கப்பட்டாலும், இன்றும் சந்தையில் லாப் சமையல் எரிவாயுவுக்கான தட்டுப்பாடு நிலவு வதாக அறியமுடிகிறது.

லிட்ரோ நிறுவனமானது இதுவரை எவ்விதமான விலை அதிகரிப்பையும் மேற்கொள்ளவில்லை. எவ்வாறாயினும், சமையல் எரிவாயு விலைகுறித்து அந்த நிறுவனங்களிடம்கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

# நாட்டின் சிவில் விடயங்களில் இராணுவம் தலையிடவில்லை

## அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, செப். 15

நாட்டில் தற்போது எந்த வொரு பாதுகாப்புத் தரப்பின ரும் சிவில் விவகாரங்களில் ஈடு படவில்லை என அமைச்சர வைப் பேச்சாளர், அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரி வித்துள்ளார். அரசாங்க தகவல் திணைக் களத்தில் நேற்று வாராந்த அமைச்சரவை முடிவு களை அறி விக்கும் ஊடக சந்திப்பு இடம் பெற்றது.

இதன்போது அவசரகாலச் சட்டம் மற்றும் இராணுவமய மாக்கல் நடவடிக்கை குறித்த ஐ. நா. ஆணையாளரின் கருத்து தொடர்பான கேள்விக்கு பதில ளிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் அண்மையில் போராட்டங்களை கட்டுப்ப டுத்துவதற்காகக் கூட அரசாங் கம் படையினரை பயன்படுத் தப்படவில்லை என்றும் அமைச் சர் டலஸ் அழகப்பெரும குறிப் பிட்டார்.

இவ்வாறு இராணுவமய மாக்கல் நடவடிக்கையையோ பொதுமக்களை அச்சுறுத்தும் முயற்சியையோ அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் தற்போதைய நிலையைக் கருத்தில் கொண்டு, பொதுமக்களுக்குத் தேவை யான அத்தியாவசியப் பொருள் களை தடையின்றி வழங்குவதை உறுதி செய்வதற்காகவே அவ சரகால விதிமுறைகள் கொண்டு வரப்பட்டன என்றும் அமைச் சர் டலஸ் அழகப்பெரும கூறி னார்.

# பருப்பு விலை உயரும் அறிகுறி!

கொழும்பு, செப். 15

நாட்டில் பருப்பு விலை மேலும் அதிகரிக்கக்கூடும் என அத்தியாவசிய பொருள்களின் இறக்குமதியாளர், விற்பனையா ளர் சங்கம் தெரிவித்துள்ளது.

சந்தையில் பருப்பின் விலை தற்போது 250 ரூபாய் வரை அதிகரித்துள்ளதாக அந்த சங் கம் குறிப்பிட்டுள்ளது.

அவுஸ்திரேலியா, கனடாவில் இருந்து பருப்பு கொள்வனவு செய்யப்படும் நிலையில், கன டாவில் விளைச்சல் குறைந்துள் ளமையால் பருப்பின் விலை அதிகரிக்கும் சாத்தியம் எழுந் துள்ளதாக சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

# சுற்றுலா பயணிகள் வருகை நாட்டுக்கு பேரழிவையே தரும்!

## சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

**கொழும்பு, செப்.15**

**தினசரி பெரியளவில் சுற்றுலாப் பயணிகள் கடுமையான கண்காணிப்பு பொறிமுறை யின்றி, இலங்கைக்குள் நுழைய அனுமதிக்கப் பட்டால், கொரோனா ஆபத்து மேலும் தீவிர மடையும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோ தகர்கள் சங்கம் கூறுகிறது.**

பொதுச் சுகாதாரப் பரிசோ தகர்கள் சங்கத்தின் தலை வர் உபுல் ரோஹண இது குறித்து கூறுகையில்-

தினசரி நாட்டுக்கு வரும் பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் இந்தியர்கள். சுற்று லாப் பயணிகளின் வருகையை சீராக்க உடனடியாக ஒரு பொறி முறையை அறிமுகப்படுத்த வேண்டும்.

நேற்றுமுன்தினம் இலங் கையில் மூன்று விமானங்கள் தரையிறங்கின. அதில் இந்தியப் பிரஜைகளை ஏற்றிச் சென்றனர். இலங்கையிலிருந்து அவர்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு சுற்றுலா விசாவில் பயணம் செய்கிறார்கள்.

சுற்றுலாத்துறையின் மூலம் இலங்கை வருமானம் ஈட்ட வேண்டும் என்பதை ஒப்புக் கொண்டாலும், தனிமைப்படுத் தல் நடவடிக்கைகளுக்கு உட் படுத்தாமல் இதுபோன்ற சுற் றுலா குழுக்களை யார் வழி நடத்துகிறார்கள்?

சுகாதாரப் பிரிவுகள், சுகா தார மருத்துவ அதிகாரிகள் மற் றும் இலங்கை இராணுவம் தனிமைப்படுத்தல் அல்லது கண்காணிப்பு செயல்பாட்டில் ஈடுபடவில்லை.

அத்தகைய சுற்றுலாக் குழுக் கள் நேரடியாக தங்கள் முகவர் கள் மற்றும் இலங்கை சுற்றுலா சபை மூலம் செயற்படுகின்றன.

சுற்றுலாக் குழுக்கள் எங்கு பயணம் செய்கிறார்கள், அவர்க ளின் பயணத் திட்டங்கள் மற் றும் அவர்கள் தங்கியிருக்கும் நாட்களின் எண்ணிக்கை தெரியவில்லை. அது பாதுகாப் பற்றது. தென்னாபிரிக்காவின் கோவிட் மாறுபாடு இது போன்ற சூழ்நிலைகளில் நாட் டுக்குள் நுழைவதைத் தடுக்க முடியாது.

டெல்டா மாறுபாடு வெளி நாட்டு மூலத்தின் மூலம் நாட் டுக்குள் நுழைந்ததாக சந்தேகிக் கப்படுகிறது. உயிர் குமிழ்கள் மற்றும் பிற வழிகாட்டுதல்கள் அறிமுகப் படுத்தப்பட்டபோதி லும், அவை கடுமையான முறை யில் அமுல்படுத்தப்படவில்லை - என்றார்.

# வரணியில் வர்த்தகர் மீது அடாவடிக்குழு தாக்குதல்!

யாழ்ப்பாணம், செப். 15

தென்மராட்சி வரணியில் கடை உரிமையாளர் ஒருவர் மீது நேற்றுக் காலை தாக்குதல் சம்ப வம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்றுக் காலை 6 மணிக்கு வரணி இயற்றாலை பகுதியில் இந்தத் தாக்குதல் நடந்துள்ளது.

பருத்தித்துறை வீதி, வரணி யில் அமைந்துள்ள கடை ஒன் றின் உரிமையாளர் மீது கொட் டன் பொல்லுகளோடு வந்த 6 பேர் கொண்ட கும்பல் அத்து மீறி வீடு புகுந்து தாக்குதலை மேற்கொண்டுள்ளது. அத்து டன் அவரது தொலைபேசியை யும் பறித்துக்கொண்டு அந்தக் கும்பல் தப்பிச்சென்றது.

இதையடுத்து கடை உரி மையாளர் சம்பவம் தொடர் பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசார ணைகளை முன்னெடுத்த கொடி காமம் பொலிஸார், தாக்குத லுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரை கைது செய்துள் ளதுடன் ஏனையோரை வலை வீசித் தேடி வருகின்றனர்.

# சுசந்திகாவுக்கும் கொரோனா

கொழும்பு, செப். 15

ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்றவரும், இலங் கையின் முன்னாள் குறுந்தூர சம்பியனுமான சுசந்திக ஜெய சிங்கவுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் நடந்த பி.சி.ஆர் சோதனையில் அவருக்கு தொற்று உறுதி யானது.

அவரின் இரண்டு குழந்தைக ளுக்கும் கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

# நாட்டில் கருத்து சுதந்திரத்துக்கு எந்தவித அச்சுறுத்தலும் இல்லை

## அமைச்சரவை பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 15

நாட்டில் கருத்து சுதந்திரத் துக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை என்று அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

நாட்டில் கருத்து சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தை அர சாங்கம் உறுதி செய்துள்ளதாக அமைச்சரவை இணைப் பேச் சாளர் ரமேஷ் பத்திரண தெரி வித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரி மைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் இலங்கை குறித்து எழுப்பிய கேள்விகளுக்கு நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் சுருக்கமாக பதிலளிக் கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது, வெளிவிவகார அமைச்சின் ஊடாக அரசாங்கம் மிச்செல் பச்லெட்டுக்கு முழு மையான பதிலை வழங்கும் என் றும் அவர் கூறினார்.

ஐக்கிய நாடுகள் மனித உரி மைகள் பேரவையின் 48 ஆவது கூட்டத்தொடர் நேற்றுமுன் தினம் ஜெனிவாவில் ஆரம்ப மானது.

இதன்போது, ஐக்கிய நாடு கள் மனித உரிமைகள் ஆணை யாளர் மிச்செல் பச்லெட் இலங்கை தொடர்பான வாய் மூல அறிக்கையை வெளியிட் டார்.

அந்த அறிக்கையில், அவச ரகாலச்சட்டம் பிறப்பிக்கப்பட் டுள்ளமை, சிவில் நிர்வாகக்கட் டமைப்புக்கள் இராணுவ மய மாக்கப்படல், நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளின் நம்பகமான முன் னேற்றங்கள் உள்ளிட்ட பல் வேறு குற்றச்சாட்டுக்களை முன் வைத்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

# மன்னார் கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு நேற்று அத்தியாவசிய பொருள்கள் கையளிப்பு

மன்னார், செப். 15

மன்னார் தாராபுரம் துருக் கிசிட்டி பகுதியில் அமைந்துள்ள கொரோனா இடைநிலை சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வரும் கொரோனா தொற்றாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு 100 அத்தி யாவசிய உலர் உணவுப் பொதி கள் மற்றும் சுகாதார பொருள் கள் உள்ளடங்கலாக ஒரு தொகுதி பொருள்கள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை கையளிக்கப்பட்டன.



இலங்கை தேவ சபைகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் நாட் டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று காரணமாக பாதிக்கப் பட்டு இடைநிலை சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருள்கள் மாகாண ரீதியாக வழங்கப்பட்டு வருகின்றன.

இதன் ஓர் அங்கமாக வட பிராந்திய தேவ சபையின் ஏற் பாட்டில் முதற்கட்டமாக மன் னார் தாராபுரம் துருக்கி சிட்டி பகுதியில் அமைந்துள்ள கொரோனா இடை நிலை சிகிச்சை நிலையத்துக்கும் உலர் உணவுப் பொதிகள் மற்றும் சுகாதார பொருள்கள் என்பன வழங்கப்பட்டன.

நேற்றுக் காலை மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் வைத்து, வட பிராந்திய தேவ சபையின் ஊழியர்களினால் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பா ளர் மருத்துவர் ரி.வினோதனி டம் இவை கையளிக்கப்பட்டன.

இதன்போது மருத்துவ கலா நிதி ரி.ஒஸ்மன் டெனி மற்றும் வைத்திய கலாநிதி திருமதி சிறிமதி ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# இணையவழி முறை கற்கைகளின்போது பிள்ளைகள் மீது அதிக அக்கறை தேவை

கொழும்பு, செப். 15

இணையவழிக் கல்வி முறை மூலம் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை கல்வி வகுப்புக ளுக்கு அனுமதிக்கும்போது நடக்கும் நடவடிக்கைகளில் மிகுந்த கவனம் செலுத்தவேண் டும் என்று தேசிய சிறுவர் பாது காப்பு அதிகாரசபை வலியுறுத் தியுள்ளது.

இது தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகா ரசபையின் தலைவர் பேராசிரி யர் முடித விதானபத்திரண தெரிவிக்கையில்-

இணையவழிக் கற்பித்தலில் சிறுவர்கள் துர்நடத்தைக்கு உட் படுத்தப்படுவதாக பல தகவல் கள் கிடைத்துள்ளன.

இணையவழிக் கல்வி முறை மூலம் கல்வி வகுப்புகள் நடத் தும்போது 15 வயதுச் சிறுமி யின் நிர்வாண ஒளிப்படம் எடுத் ததாக பாணந்துறை திகலா பகு தியில் பயிற்சி வகுப்பு ஆசிரியர் கைது செய்யப்பட்டார்.

சிறுமியின் தாயார் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரியி டம் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

சிறுவர்கள் இணையவழி பயிற்சி வகுப்புகளுக்கு உட்படுத் தப்பட்ட இதுபோன்ற பல சம் பவங்கள் பதிவாகியுள்ளன- என்றார்.

# ஜனாதிபதி அமெரிக்கா செல்லும்போது ஊரடங்கு தளர்த்தப்படும் சாத்தியம்

கொழும்பு, செப். 15

எதிர்வரும் 21ஆம் திகதிக்குப் பின்னர் நாட்டை முழுமையாகத் திறப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதன்படி 21ஆம் திகதி அதிகாலை 04 மணியுடன் தனிமைப் படுத்தல்ஊரடங்குச்சட்டம்நிறைவுக்கு வரும் என்றும், அதன் பின்னர் நாட்டின் வழமையான செயற்பாடுகளை தொடர்வது பற்றிய பரிந்துரைகளை அறிக்கையாக முன்வைக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஐ.நா பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக எதிர்வரும் 21ஆம் திகதி அமெரிக்கா நோக்கி பயணிக்கவுள்ளார்.

எனவே, அமெரிக்கா செல்வதற்கு முன்னதாக நாடு திறக்கப்படும் தீர்மானம் வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சுகாதார பரிசோதகர்களை தாக்க முயன்ற நபர் கைது!

கொழும்பு, செப். 15

முகக்கவசம் அணியுமாறு அறிவுறுத்தியமைக்காக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இருவரை தகாத வார்த்தைகளால் தூற்றி, அவர்களை தாக்க முயன்ற சந்தேக நபரொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காலி, நெலுவ பிரதேசத்தில் மரண வீடொன்றில் கலந்து கொண்ட ஒருவர் முகக்கவசம் அணிய மறுத்துள்ளார். இதனால் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் குறித்த நபரை எச்சரித்துள்ளனர். இதனையடுத்து சுகாதாரப் பரிசோதகர்களை சந்தேகநபர் தகாத வார்த்தைகளால் தூற்றி பொல்லினால் தாக்க முயன்றுள்ளார். எனினும், அங்கிருந்தவர்கள் அதனை தடுத்து நிறுத்தியுள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடு அளிக்கப்பட்டதையடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# மத்திய வங்கி அறிக்கைமீது இனி நம்பகத்தன்மையில்லை

## கப்ராலின் நியமனத்துக்கு திஸ்ஸ அத்தநாயக்க எதிர்ப்பு



**கொழும்பு, செப். 15**

**சுயாதீன நிறுவனமாக இயங்கவேண்டிய மத்திய வங்கியையும் இந்த அரசு அரசியல் மயப்படுத்திவிட்டது. எனவே, மத்திய வங்கி அறிக்கை மீது இனிமேல் நம்பகத்தன்மையற்ற நிலைமையே ஏற்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர்இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மத்திய வங்கியென்பது சுயாதீனமாக இயங்கவேண்டிய மிக முக்கிய நிறுவனமாகும். சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து பணியாற்ற வேண்டும். எனவே தான் மத்திய வங்கியின் ஆளுநர் பதவிக்கு சுயாதீனமாக இயங்கக் கூடிய துறைசார் நிபுணர்கள் நியமிக்கப்படுகின்றனர். அப்போதுதான் மத்திய வங்கியால் வழங்கப்படும் தகவல்கள்மீது நம்பிக்கை ஏற்படும்.

ஆனால் இன்று என்ன நடக்கின்றது? கட்சி அரசியலை முன்னெடுத்தவர் மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். இதனால் இனி வரும் காலங்களில் மத்திய வங்கி அறிக்கைகூட, அரசியல் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனமாக மாறக்கூடும். தகவல்களில் நம்பகத் தன்மை இருக்காது. இதனால்நாட்டின்பொருளாதாரம் வங்குரோத்து அடையும் அபாயம் உள்ளது.

மத்திய வங்கிக்கு அரசியல் நியமனம் வேண்டாம் எனக்கூறவில்லை. ஆனால், திறமையான பலர்உள்ளனர். இந்நிலையில்ஆளுநர் ஒருவரை நியமிப்பதற்கான நெறிமுறைகளைமீறி கப்ரால் நியமிக்கப்படுவது ஏன்?-என்றார்.

அதேவேளை, மத்திய வங்கி ஆளுநர் பதவிக்கு அஜித் நிவாட் கப்ரால் நியமிக்கப்பட்டமையானது, கோழிகளை நரியிடம்ஒப்படைத்த செயலுக்கு நிகரானதாகும் என்று ஜே.வி.பி. உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி குறிப்பிட்டார்.

# ரஞ்சனின் விடுதலை உண்மை இல்லை

கொழும்பு, செப். 15

சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவுள்ளாரென வெளியாகும் செய்தியில் எவ்வித உண்மையும் இல்லையென சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி இது தொடர்பில் தனக்கு எவ்விதமான அறிவித்தலோ அல்லது தன்னுடன் கலந்துரையாடலையோ மேற்கொள்ளவில்லை எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்யுமாறு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இது தொடர்பில் கருத்து வெளியிடும்போதே இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த இந்த விடயத்தை வெளியிட்டார்.

# சம்பளத்தில் 5 சதவீத வரி அரசின் தீர்மானம் அல்ல என்கிறார் டலஸ்!



கொழும்பு, செப். 15

100,000 ரூபாவுக்கு மேல் சம்பளம் பெறுபவர்களுக்கு 5 சதவீத வரி விதிக்கவேண்டும் என்ற அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் கருத்து அரசின் நிலைப்பாடல்ல என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் டலஸ் அழகப்பெரும இதனைத் தெரிவித்தார்.

அத்தகைய திட்டம் வாய்மொழியாகவோ அல்லது அமைச்சரவையிலோ பேசப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

பல்வேறு பகுதிகளில் அத்தியாவசிய பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக வெளியாகும் செய்திகளில் உண்மை இல்லை என்றும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும கூறினார்.

மேலும் 21 ஆம் திகதிக்குப் பின்னர் நிலைமை இயல்புக்கு திரும்பும் என்றும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும சுட்டிக்காட்டினார்.

# பட்டதாரிகளின் பயிற்சிக்காலத்தை நீடிக்க எந்த தீர்மானமும் இல்லை

கொழும்பு, செப். 15

பட்டதாரிகளின் பயிற்சிக் காலத்தை நீடிப்பதற்கான எந்தவொரு தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை வெளியிடும் ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் டலஸ் அழகப்பெரும இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பயிற்சிக் காலத்தை மேலும் 6 மாதத்துக்கு நீடிப்பதற்கான பத்திரம் அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டிருந்தது.

53 ஆயிரம் பயிற்சிப் பட்டதாரிகளில் 18 ஆயிரம் பேருக்கு நியமனம் வழங்குவதற்கு எதிர்பார்த்திருந்தபோதிலும் அந்த பணிகள் இன்னும் நிறைவடையவில்லை.

இதன் காரணமாக அந்த பணிகளை விரைவுப்படுத்தி, எஞ்சியவர்களையும் அரச சேவையில் உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய தரப்பினரை அறிவுறுத்துமாறு ஜனாதிபதி விடயதான அமைச்சர்களை பணித்துள்ளார்-என்றார்.

# எரிபொருள் தட்டுப்பாடு இல்லை



கொழும்பு, செப். 15

நாட்டில் எரிபொருளுக்கு எவ்வித தட்டுப்பாடும் இல்லை. தேவையான எரிபொருள் கையிருப்பில் உள்ளது என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரான அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின்போது, எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என வெளியாகும்தகவல்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

# பல்கலைக்கழகங்களில் தினசரி வன்முறையும் புறந்தள்ளலும்



ரம்யா குமார்

பல்கலைக்கழகங்களில் "வன்முறை" எனக் கூறியதும் இயல்பாகவே எமது கலந்துரையாடல்கள் பகிடிவதையின் பால் திரும்பிவிடுகின்றன. சில சமயங்களில் வழக்கமான நடைமுறைகளையோ அதிகாரத்தையோ பின்பற்றாத துணைவேந்தரோ கல்வியாளரோ திடீரெனப் பதவி நீக்கம் செய்யப்படுவது தொடர்பாகப் பேசிக்கொள்கின்றோம். எனினும் இவற்றுக்கு மத்தியில் பல்கலைக்கழகங்களில் தினசரி இடம்பெறும் பால், இனம், வர்க்கம் ரீதியான வன்முறைகள் மறைந்தே காணப்படுகின்றன.

பல அரச பல்கலைக்கழகங்களின் மாணவ மற்றும் ஆசிரிய சமூகங்களுடனான உரையாடல்களைக் கொண்டு பால் அடிப்படையிலான வன்முறை எமது நாளாந்த வாழ்வில் எவ்வாறு ஊடுருவியுள்ளது என்பதையும் அது எவ்வாறு புறந்தள்ளல் மற்றும் அநீதியின் தொடர்ச்சியைப் பேணுகின்றது என்பதையும் இங்கு விவரிக்க விரும்புகின்றேன்.

**அதிகாரப் படிநிலைகள்**

முன்பள்ளியிலிருந்து மூன்றாம் நிலைக் கல்வி வரை எமது மாணவர்கள் அதிகாரத்துக்குக் கீழ்ப்படியவும், எதிர்க் கேள்வி கேட்காதிருக்கவும் கற்பிக்கப்படுகிறார்கள். அவ்வாறு அடிபணியாதவர்கள் கண்டிக்கப்படுவதோடு, மாற்று வழிகளில் சிந்திப்பதும் தடுக்கப்படுகின்றது. தொன்மையான சிங்கள மன்னன், சேலையணிந்த நல்லொழுக்கமுள்ள தாய், மாமிசம் விரும்பும் முஸ்லிம்கள் போன்ற உருவகிப்புகளின் மூலம் பள்ளிக்கூடப் பாடத்திட்டங்கள் சமூகப் படிநிலைகளையும் வேறுபாடுகளையும் உண்டாக்குகின்றன.

மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குள் நுழையும் போதே எமது கல்வி முறையால் உருவாக்கப்பட்ட பாரபட்சங்களுடனும், முன்னபிப்பிராயங்களுடனும் வருகின்றார்கள். தமது சிந்தனைப் போக்கிற்குள் அடங்காதவர்களோடு அவர்கள் பெரும்பாலும் பழக முனைந்திருக்க மாட்டார்கள். அறியாமை, தவறான தகவல்கள் (பகிடிவதை மூலம் போதிக்கப்படுபவை), மற்றும் பரிச்சயமற்ற பல்கலைக்கழகச் சூழல் போன்றவை மாணவர்களை மேலும் பிரிவினைக்குட்படுத்துகின்றன. பல்கலைக்கழக மாணவியொருவர் தனது முதலாவது வாரத்தில் எதிர்கொண்ட அடக்குமுறையான சூழலைப் பின்வருமாறு வர்ணிக்கின்றார்.

"நாம் (பெண்கள்) 'தகாத' முறையில் ஆடையணிந்தாலோ, 'தவறான' முறையில் நடந்துகொண்டாலோ சிரேஷ்ட அணிகளிலுள்ள ஆண் மாணவர்கள் எமது அணியிலுள்ள ஆண் மாணவர்களைக் கண்டிக்கிறார்கள். நாம் (மாணவிகள்) ஆடையணியும் முறை, எம்மிலுள்ள தவறுகள் போன்றவை தொடர்பாக அவ்விரு சாராரும் கலந்துரையாடியதோடு, மாணவிகளுக்கு ஆண் மாணவர்கள் 'பொறுப்பு' என்றும் கூறப்பட்டது....."

பல்கலைக்கழக அதிகாரிகளால் பகிடிவதையைக் கையாள முடியாதிருப்பது பல்கலைக்கழகங்களின் அமைப்பு முறையே அதிகாரப் படிநிலைகளின் மீது கட்டியெழுப்பப்பட்டிருப்பதாலும், சில சமயங்களில் அவர்களுமே இவ்வாறான வன்முறைகளுக்குத் துணைபோவதாலுமாகும். முஸ்லிம் இளங்கலை மாணவியொருவர் உயிர்த்த ஞாயிறு தின குண்டு வெடிப்புச் சம்பவங்களின் பின்னர் தான் ஹிஜாப் அணிந்த காரணத்தால் தன்னை மட்டும் ஓரங்கட்டித் தனது புத்தகப்பையை வாயில் பாதுகாவலர்கள் பரிசீலித்ததாகக் கூறுகிறார். ஏனைய மாணவர்களை அவர்கள் பரிசீலனையின்றி அனுமதித்த அதேசமயம் குறித்த இந்த மாணவி "சஹ்ரானின் தங்கை" போல் இருப்பதாகவும் கேலி செய்திருந்தனர்.

**இரண்டாம் நிலை மாணவர்களிலிருந்து..**

மாணவர்கள் இயல்பாகவே பால் ரீதியான மற்றும் ஏனைய "விதிமுறைகளை" உள்வாங்குகின்றார் கள். அவை தொடர்பாக எதிர்க்கேள்வி கேட்பதற்கான சந்தர்ப்பங்களோ அற்ப சொற்பம். மாணவர்களின் செயல்பாடுகள் பெரும்பாலும் பால் அடிப்படையில் வேறுபடுத்தப்பட்டுக் காணப்படுகின்றன. உதாரணமாக நிகழ்வொன்றை ஒழுங்கு செய்யும் போது மாணவிகள் பெரும்பாலும் எழுத்து வேலைகள், கணக்கு வைத்திருத்தல், தேநீர் பரிமாறுதல் போன்றவற்றிற்குத் தள்ளப்படுகிறார்கள். சில பீடங்களில் மாணவிகள் தவறாது விரிவுரைகளுக்குச் சமுகமளித்துத் தமது ஆண் நண்பர்களுக்காக குறிப்பெடுக்கும் அதேசமயம், ஆண்களோ வேறு "சலிப்புக் குறைந்த" செயல்பாடுகளில் ஈடுபடத் தூண்டப்படுகிறார்கள். இந்த துணைக் கலாசாரத்திற்கு அடிபணியாதவர்கள் சுய நலவாதிகள், சமூக விரோதிகள், உயர் குழு சார்ந்தோர் என முத்திரை குத்தப் படுகிறார்கள்.

பல பல்கலைக்கழகங்களில் பெண்களுக்கு (மாணவிகள்) மாணவர் ஒன்றியத் தலைவர் போன்ற தலைமைப் பொறுப்புகள் வழங்கப்படுவதில்லை. பெண் மாணவர்களின் எண்ணிக்கை ஆண் மாணவர்களைக் காட்டிலும் அதிக மாக இருக்கும் பீடங்களிலும் கூட தலை மைப் பதவிகள் அவர்களுக்கு மறுக்கப் படுகின்றன. "தலைவர்" என்ற ஒருவர் ஆணாகவே உருவகிக்கப்படுகின்றார் என பல்கலைக்கழக மாணவரொருவர் குறிப்பிட்டிருந்தார். கூட்டங்கள், கலந்துரையாடல்களின் பின் வீடுகள்/விடுதிகளுக்குத் தனித்துப் பெண்களால் திரும்ப முடியாது என்ற கருத்து மூலம் மேற்கண்ட கொள்கை நியாயப்படுத்தப்படுகிறது. தனித்துப் பயணம் செய்வதைப் பழக்கமாகக் கொண்ட பல பெண்களுக்கு இது வினோதமான ஒரு கருத்தாக இருக்கின்றது.

பெண்கள் ஆடையணியும் முறைகள் கடுமையாக மேற்பார்வை செய்யப்படுகின்றன. தான் அணிந்த ஆடை பாதம் வரைக்கும் நீளமாக இருக்காததால் பிரார்த்தனை அறைக்குத் தான் செல்வது தடை செய்யப்பட்டதாக முஸ்லிம் மாணவி ஒருவர் கூறியிருந்தார். நாட்டின் தென்பகுதியில் கற்கும் ஒரு மாணவி வேறு பீடத்தைச் சேர்ந்த தனது (தமிழ்) தோழிகள் 'கலாசாரத்தைப்' பேணும் பெயரில் சல்வார், ஒற்றைப்பின்னல், பொட்டு, விபூதி அணிந்து வரக் கட்டாயப்படுத்தப்படுவதாகக் கூறுகின்றார். இது போலவே வடக்கில் தமிழர் பண்பாடுகளை மீறாதிருக்கவும், பாதுகாப்பின் பெயரிலும் இறுக்கமான, குட்டையான உடைகள் அணியக் கூடாது எனச் சிங்கள மாணவிகள் தமது ஆண் நண்பர்களால் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பல்கலைக்கழக ஆசிரியர்களாலும் வேறு அதிகாரிகளாலும் கூட பால் ரீதியான விதிமுறைகள் வலுப்படுத்தப்படுகின்றன. வைத்தியரொருவர் தனது பெண் மாணவிகளுக்குப் பட்டப் பின் படிப்பைத் தொடர முன் தெளிவாகச் சிந்திக்க வேண்டும் எனக் கூறியதால் ஊக்கமிழந்தவாறுதான் உணர்ந்ததாக ஒரு மருத்துவபீட மாணவி குறிப்பிடுகின்றார்: "எமது திருமணம் தாமதமடையும், எம்மால் கணவரொருவரைக் கண்டுபிடிக்க முடியாதிருக்கும் என அந்த மருத்துவர் கூறினார்," எனக் குறிப்பிடப்பட்டது. வேறு ஒரு மாணவி மருத்துவரொருவர் தன்னையும் ஏனைய மாணவிகளையும் உடல் பருமன் மற்றும் உருவத்தின் அடிப்படையில் சுட்டுவதாகக் கூறியிருந்தார். இவ்வாறான வன்முறைகள் தினமும் பெண்களால் எதிர்கொள்ளப்படுகின்றன.

**இரண்டாம் நிலைக் கல்வியாளர்கள் வரை**

தற்காலிக மற்றும் தகுதிகாண் நிலை விரிவுரையாளர்கள் பல்கலைக்கழக அதிகாரப் படிநிலையின் அடிமட்டத்தில் காணப்படுகின்றார்கள். பேராசிரியரொருவர் தனது பீடத்தில் கனிஷ்ட விரிவுரையாளர்கள், குறிப்பாகப் பெண்கள் கூட்டங்களின் போது புறக்கணிக்கப்படுவது அல்லது அடக்கிப் பேசப்படுவதாகக் குறிப்பிடுகின்றார். தனது வேலையை ஆரம்பிக்கும் போது துணை ஊழியர் ஒருவர் எரிச்சலூட்டும் வகையில் நடந்துகொண்டதாகத் தற்காலிக விரிவுரையாளரொருவர் கூறுகின்றார். அத்துணை ஊழியர் பெண்களை அவமதிக்கும் முறையில் நடந்துகொள்வது தெரிந்திருந்த போதும் தனது முறைப்பாடுகள் செவிமடுக்கப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

கல்வியாளர்களுக்கு மத்தியில் பெண்கள் பெரும்பாலும் தீர்மானங்கள் மேற்கொள்வதில் ஈடுபடுத்தப்படுவதில்லை. ஆண்கள் மற்றும் அதிகாரத்துக்கு விசுவாசமானவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட குழுக்களின் முறைசாராக் கூட்டங்கள் மூலம் அதிகமாகத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவதுண்டு. இவ்வாறான கலாசாரம் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் படிநிலைகளிலும் நிலவுவதோடு "மச்சான்" கலந்துரையாடல்களில் பங்குகொள்ளத் "திராணியற்ற" பெண்களும் சிறுபான்மையினரும் புறந்தள்ளப்படுகின்றார்கள். கேள்வி எழுப்புபவர்கள் முரண்பாடான, பிரச்னைக்குரிய நபர்கள் என அலட்சியப்படுத்தப்படுகின்றார்கள்.

பால் ரீதியான அதிகாரப் படிநிலைகளைப் பல்கலைக்கழகங்களின் உயர் இடங்களில் அதிகம் காணலாம். பெண்கள் பீடாதிபதிகளாகவும், அதிலும் குறைவாகத் துணைவேந்தர்களாகவும் அதிகாரப் பதவிகளில் இருந்த போதும் கல்வி ரீதியான செயற்பாடுகள் பால் அடிப்படையில் பாகுபட்டே காணப்படுகின்றன. பல்வேறு செயல்குழுக்களில் பெண்கள் பெரும்பாலும் ஒருங்கிணைப்பு மற்றும் எழுத்துவேலைகளில் ஈடுபடுவதோடு, அவர்களது பங்களிப்புகள் அங்கீகரிக்கப்படுவதில்லை. பல பெண்கள் குடும்ப அர்ப்பணிப்புகள், பால் ரீதியான எதிர்மறையான பண்புகளின் பெயரில் குற்றஞ்சுமத்தப்படுகிறார்கள். எனினும் அவர்களது (பரந்த) சராசரித்தன்மைக்காக ஆண்கள் ஒருபோதும் பால் ரீதியாகக் குற்றஞ்சுமத்தப்படுவதில்லை.

இவை அனைத்திற்கும் அடிப்படையாகப் பெண்களைப் புறநிலைப்படுத்தும் பாலியல் ரீதியாகத் சித்தரிக்கும் பாலினவாதம் காணப்படுகின்றது. பெண் கல்வியாளர்கள் அவர்களது சிகை அலங்காரம், ஆடை தொடர்பாகக் கருத்துக்களை எதிர்கொள்வதைப் பொதுவாகக் காணலாம். பாலியல் துன்புறுத்தல் போன்ற பாரதூரமான தகாத செயற்பாடுகளின் போதுகூட எவருக்கும் முறையிட முடியாத நிலை காணப்படுகின்றது. பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழக நடைமுறைகள் பல பெண்கள் எதிர்கொள்ள விரும்பாத இடர்பாடுகளுடன் காணப்படுவதாகப் பேராசிரியரொருவர் குறிப்பிடுகின்றார்.

**பின்விளைவுகள்**

இவ்வாறானதொரு சூழ்நிலை எமது பல்கலைக்கழகங்களையும் சமூகத்தையும் எவ்வாறு தாக்கும்? அதன் உடனடி விளைவு பல்கலைக்கழக நிர்வாகிகளை அதிகாரத்துக்காக இயங்க அனுமதிப்பதாகும். இரண்டாவதாக அறிவு மற்றும் பொதுசனக் கலந்துரையாடல்களிலுள்ள வரையறைகளை உடைப்பதை விடுத்து சமூகப் படிநிலைகளையே பல்கலைக்கழகங்கள் தாபிக்கின்றன. மூன்றாவதாகத் தர்க்க ரீதியான கலந்துரையாடல்களை ஊக்குவிக்காதவிடத்து ஈடுபாடற்ற, அநீதிக்கெதிராக செயற்பட முடியாத ஒரு பல்கலைக்கழகச் சமூகத்தைப் பேண இவை உதவுகின்றன.

இப் பிரச்சினைக்கான தீர்வு எமது நிறுவனங்களுக்குள் ஆரம்பிக்க வேண்டும். சமத்துவமான இலவசக் கல்வியின் அடிப்படையில் ஆசிரியர்களும் மாணவர்களும் ஒருங்கிணைந்து உயர் கல்வி தொடர்பான வாதங்களில் பங்குகொண்டு நீதிக்காகக் குரல் கொடுக்க வேண்டும்.

**கட்டுரையாளர் :**
**ரம்யா குமார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் சமூக மற்றும் குடும்ப மருத்துவப் பிரிவில் கடமையாற்றுகின்றார்.**

**மொழிபெயர்ப்பு:**
**கோபிகா சிவகுமார்**
■

ஈழநாடு



# கொடநாடு வழக்கில் குற்றவாளியை நெருங்கிவிட்டதா காவல்துறை?

## அ.தி.மு.கவில் அதிர்வலைகளை ஏற்படுத்தும் புகழேந்தியின் கருத்து

ஆ. விஜயானந்த்



தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் கொடநாடு கொலை, கொள்ளை வழக்கில் குற்றவாளிகளை காவல்துறை நெருங்கி விட்டதாக அ.தி.மு.க முன்னாள் செய்தித் தொடர்பாளர் பெங்களூர் புகழேந்தி பேசியிருப்பது அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. “இந்தச் சம்பவத்துக்கு எடப்பாடி பழனிசாமியே முழுப் பொறுப்பு“ எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்குச் சொந்தமான கொடநாடு எஸ்டேட்டில் கடந்த 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ஆம் தேதி கொலை, கொள்ளைச் சம்பவம் அரங்கேறியது.

இந்தியாவை உலுக்கிய இந்தச் சம்பவத்தில் கொடநாடு எஸ்டேட்டின் காவலாளி ஓம் பகதூர் கொல்லப்பட்டார். இதனைத் தொடர்ந்து கொள்ளைச் சம்பவத்தில் முக்கிய நபராகக் கருதப்பட்ட கனகராஜ் என்பவர் சேலம் அருகே நடந்த சாலை விபத்தில் இறந்தார். மற்றொரு குற்றவாளி எனக் கூறப்படும் சயான் தனது குடும்பத்தினருடன் கேரளா செல்லும் வழியில் சாலை விபத்தை எதிர் கொண்டார். இதில், சயானின் மனைவியும் குழந்தையும் உயிரிழந்தனர்.

தொடர்ந்து, கொடநாடு எஸ்டேட்டின் சி.சி.டி.வி கமராக்களை கையாண்டு வந்த தினேஷ் என்ற நபரும் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டதாகத் தகவல் வெளியானது.

நீலகிரி நீதிமன்றத்தில் நடந்து வந்த இந்த வழக்கு, இறுதிக்கட்டத்தை நெருங்கும் வேளையில் தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. தி.மு.க அரசு பதவிக்கு வந்த பின்னர், இந்த வழக்கில் மேலதிக விசாரணை நடைபெற்று வருகிறது. கோடநாடு வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள சயானிடம் நீலகிரி எஸ்.பி ஆசிஷ் ராவத் 3 மணி நேரம் விசாரணையை நடத்தினார்.

**அதிர்ச்சியில் எடப்பாடி**

இதையடுத்து, சாலை விபத்தில் உயிரிழந்த கனகராஜின் அண்ணன் தனபாலிடமும் விசாரணை நடைபெற்றது. இதனால் அதிர்ச்சியடைந்த முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி, தன்னை இந்த வழக்கில் சேர்க்க சதி நடப்பதாகக் கூறினார். மேலும், இந்த வழக்கில் அரசுத் தரப்பு சாட்சியாக உள்ள கோவையைச் சேர்ந்த அனுபவ் ரவி என்பவர், இந்த வழக்கின் விசாரணைக்குத் தடை கேட்டு நீதிமன்றத்தை அணுகினார். கோடநாடு விவகாரத்தை முன்வைத்து அ.தி. மு.கவினர் தொடர்ந்து அரசியல் செய்யவே, “அரசியல் காரணங் களுக்காக விசாரணை நடக்கவில்லை. இந்த வழக்கில் உண்மைக் குற்ற வாளிகளைக் கண்டறியவே விசாரணை நடைபெற்று வருகிறது” என சட்டமன்றத்தில் முதலமைச்சர் ஸ்டாலின் விளக்கம் அளித்தார்.

தொடர்ந்து, திங்கள்கிழமை சட்டமன்றத்தில் பேசிய முதலமைச்சர், “கொடநாடு வழக்கை தொடர்ந்து நடத்துவோம். உண்மைக் குற்றவாளிகள் யாராக இருந்தாலும் தப்பிக்க முடியாது” என்றார். தி.மு.க அரசு காட்டும் உறுதியையடுத்து, அ.தி.மு.க தரப்பில் சட்டரீதியிலான ஆலோசனைகள் நடந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

“கொடநாடு கொலை வழக்கை ஐந்து தனிப்படைகள் விசாரணை நடத்தி வருகின்றன. காவலாளி ஓம் பகதூர் கொலை விவகாரம் மற்றும் காணாமல் போன காவலாளி கிருஷ்ண பகதூரை தேடுவதற்கு ஒரு குழுவும் சாலை விபத்துகள், கொலையாளிகள் தப்பித்த வழித்தடங்கள் என மற்ற படைகள் துரித விசாரணையை மேற்கொண்டு வருகின்றன. இவையெல்லாம் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு செய்திருக்க வேண்டிய பணிகள். இந்த வழக்கில் ஒவ்வொரு தடையங்களாக காவல்துறை தேடிப் பிடிக்கத் தொடங்கிவிட்டது” என்கிறார் அ.தி.மு.க முன்னாள் செய்தித் தொடர்பாளர் பெங்களூரு புகழேந்தி.

தொடர்ந்து மேலதிக தகவல்களை தெரிவித்தவர், “கொடநாடு எஸ்டேட் அருகில் உள்ளடவரில் இருந்து சென்ற




அலைபேசி அழைப்புகளை யெல்லாம் பொலிஸார் எடுத்துவிட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது. கொலை, கொள்ளை நடந்த அன்று கொலையாளிகள் சென்ற வாகனத்தை கூடலூர் அருகே உள்ள சோதனைச் சாவடியில் நிறுத்தி பொலிஸ் சோதனையை நடத்தியுள்ளனர். அப்போது, “அவர்களை விட மாட்டோம்“ என அங்கிருந்த காவலர்கள் கூறியபோது ஒரு முன்னாள் அமைச்சர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார்.

**அந்த முன்னாள் அமைச்சர் யார்?**

“அவர்கள் நம்முடைய ஆள்கள்தான், விட்டுவிடுங்கள்” என அந்த அமைச்சர் கூறியுள்ளார். இது தற்செயலாக நடந்ததா எனத் தெரியவில்லை. அடுத்ததாக, அரசுத் தரப்பு சாட்சிக்கு அரசுதான் ஆதரவாகப் பேசுவது வழக்கம். எந்த வழக்கிலும் சாட்சி தடை கேட்டதாக வரலாறு இல்லை. கோவையைச் சேர்ந்த அனுபவ் ரவி தடை கேட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார். அந்த சாட்சி உச்ச நீதிமன்றத்துக்குச் செல்வதற்கு யார் காரணம்? எங்கேயாவது தடை கிடைக் குமா என இந்த வழக்கில் அவர்கள் அவசரப்பட வேண்டிய அவசியம் என்ன?” என்கிறார்.

மேலும், “சட்டமன்றத்தில் சபாநாயகரின் அனுமதியில்லாமல் இந்த விவகாரத்தை சபையில் எடப்பாடி பழனிசாமி பேசினார். பேரவையின் விதிகளை எடப்பாடி நன்கு அறிந்தவர். சபாநாயகரின் அனுமதி யில்லாமல் பேசியது என்பது சபை விதிகளுக்கு முரணானது. “இந்த வழக்கை சந்திக்கத் தயார்” எனக் கூறாமல், “என் மீது பழி போடப் பார்க்கிறார்கள்” என்கிறார். ஜெயலலிதா இறந்து நான்கே மாதங்களில் எஸ்டேட்டில் காவல் துறையின் பாதுகாப்பை அகற்ற வேண்டிய அவசியம் என்ன?

**எடப்பாடி பழனிசாமியே பொறுப்பு**

எஸ்டேட்டின் உரிமையாளரான சசிகலா சிறையில் இருந்தார். அங்கு ஜெயலலிதாவின் உடைமைகளும் இருந்தன. அவரது பொருள்களை நினைவுச் சின்னமாகவும் பயன்படுத்தலாம். அங்கு துப்பாக்கி ஏந்திய பொலிஸார் 2 பேர் இருந்திருந்தால்கூட கொலை, கொள்ளைச் சம்பவம் நடந்திருக்காது. அப்போது பொலிஸ் துறை அமைச்சராக இருந்த எடப்பாடி பழனிசாமிதான் இந்தச் சம்பவத்துக்கு முழுப் பொறுப்பு.

அங்கிருந்தவர்களை அப்புறப்படுத்திய எடப்பாடி பழனிசாமி, இந்தச் சம்பவத்துக்குப் பொறுப்பேற்று பதவி விலகியிருக்க வேண்டும். கொலை, கொள்ளை நடந்ததற்கு பொறுப்பேற்க வேண்டிய இடத்தில் எடப்பாடி இருக்கிறார். அதனை அவ்வளவு எளிதாக கைகழுவி விட முடியாது. இந்த வழக்கில் எடப்பாடி சிக்கியிருக்கிறார் என்பதுதான் உண்மை. பல ஆதாரங்களும் தடயங்களும் காவல்துறைக்குக் கிடைத்துள்ளதாக எனக்குத் தகவல்கள் வந்துள்ளன” என்கிறார். எடப்பாடி பழனிசாமி மீது தொடக் கத்தில் இருந்தே நீங்கள் முரண்பட்டு நிற் கிறீர்கள். அதன் வெளிப்பாடாக உங்கள் வார்த்தைகளைப் பார்க்கலாமா? என் றோம்.

“அவர் மீது தனிப்பட்ட எந்தக் கோபமும் கிடையாது. தனிப் பட்ட முறையில் அவர் மீது எந்த வித வருத்தங்களும் கிடையாது. அவரை முதலமைச்சராக பதவியில் அமர்த்திவிட்டு இன்று சசிகலா வருந்துகிறார். அவர் கையில் உள்துறை சிக்கிக் கொண்டுவிட்டது. எந்தக் கோணத்தில் பார்த் தாலும்



இந்த வழக்கில் சந்தேகம் தெளிவாகிறது. யார் உயிர் பறி போனாலும் அது உயிர்தான். விபத்து என்கிறார்கள். விசாரணையில்தான் அது விபத்தா, மரணமா என்பது தெரியவரும். இது தொடர் கொலையாக ஏன் இருக்கக் கூடாது. அப்படியிருக் கும்போது குற்றவாளிகளை குண்டர் சட்டத்தில் கைது செய் யவும் வாய்ப்புள்ளது” என்கிறார்.

**ஆற்றாமையின் வெளிப்பாடா?**

கொடநாடு வழக்கில் பெங்களூரு புகழேந்தியின் குற்றச்சாட்டுகள் தொடர் பாக, அ.தி.மு.க செய்தித் தொடர்பாளர் கோவை மகேஸ்வரியிடம் பேசினோம். “அ.தி.மு.கவில் இருந்து நீக்கப்பட்டதால் அவருக்கு அந்தக் கோபம் இருக்கத்தான் செய்யும். இங்கு பதவியில் இருந்த வரை யில் அ.தி.மு.கவுக்கு ஆதரவாகப் பேசி வந்தார். சசிகலா முகாமில் இருந்தாலும் தினகரனை கடுமையாக விமர்சித்துப் பேசி வந்தார். இங்கிருந்து வெளியேறியதால் அந்த ஆற்றாமையில் அவர் பேசி வருகிறார்” என்கிறார்.

தொடர்ந்து பேசியவர், “காவல்துறை அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என இவருக்கு எப்படித் தெரியும். இவரிடம் கூறிவிட்டுத்தான் செயல்படுவார்களா? குற்றவாளிகளை நெருங்கிவிட்டது என இவருக்கு எப்படித் தெரியும். தன்னைத் தண்டித்தவர்கள், தண்டிக்கப்பட வேண்டும் என்ற கோபத்தில் பேசுவதாகத்தான் பார்க்க முடிகிறது. இந்த வழக்கில் உண்மை எப்படியும் வெளிவரத்தான் போகிறது. கோடநாடு வழக்கில் காவல்துறையின் விசாரணை நடந்து வருகிறது. அ.தி.மு.க ஆட்சியில் நடந்த வழக்கின் நீட்சியாகத்தான் இதைப் பார்க்க வேண்டியுள்ளது.”

“தனிப்படைகளை அமைத்து அ.தி.மு.கவுக்கு ஓர் அழுத்தத்தையும் அவப் பெயரையும் உண்டாக்க முனைகிறார்கள். உள்ளாட்சித் தேர்தல் நடக்க உள்ளதால் உப்பு, காரம் போட்டு இந்த வழக்கில் சற்று நெடியை உண்டாக்க முனைகிறார்கள். இதனால் எங்கள் பக்கம் உள்ள தலைவர்கள் யாரும் பதட்டப்படவில்லை. காவல்துறைக்குத் தலைவராக இருந்ததால் சட்டமன்றத்தில் எடப்பாடி பழனிசாமி பேசினார். அவர் அமைதியாக இருந்திருந்தால், மௌனம் சம்மதத்துக்கு அறிகுறி எனப் பேசியிருப்பார்கள். இப்போது அதைப் பற்றிப் பேசினால், பதற்றப்படுவதாகக் கூறுகிறார்கள். கோடநாடு விவகாரத்தில் அ.தி.மு.கவுக்கு எதிராக சதிவலை பின்னப்படுகிறது” என்கிறார். ■

# 2021 க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் வினாத்தாள் கணக்கீடு - I

ஆசிரியர் : கே.பாலகஜன்

நேரம் : 2 மணித்தியாலங்கள்

கல்வி tv CHANNEL

- **31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளினை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

**31)** பின்வரும் கூற்றுக்கள் **வணிகமொன்றின் நிதிக்கணக்கீட்டின்** வகிபாகம் தொடர்பில் **சரியா(T), அல்லது பிழையா (F) எனக்குறிப்பிடுக.**

| கூற்றுக்கள் | சரி/பிழை |
|---|---|
| அ - நிதிக்கணக்கீட்டின் **முதற்பணியாக** அமைவது **இனங்காணலும், பதிவு செய்தலும்** ஆகும். | ...................... |
| ஆ -**உரிமையாண்மை,காசுப்பாய்ச்சல்** என்பன **நிதிக்கூற்றுக்களின் மூலங்களாக** கருதப்படுகின்றன. | ...................... |
| இ - இலங்கையில் கணக்கீட்டு நியமங்களினை தோற்றுவிப்பதிலும் பராமரிப்பதிலும் **இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனம்** தொழிற்படுகின்றது. | ...................... |
| ஈ -**மொத்த முற்றுமடங்கிய வருமானம்** என்பது **காலப்பகுதிக்கான இலாபமும், ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தினையும் உள்ளடக்கியுள்ளது.** | ...................... |

**32)** பின்வரும் ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல்களும் அதற்கு எதிரேயுள்ள **மூலங்கள் மீது ஏற்படுத்தும் விளைவினை அதிகரிக்குமா, குறைக்குமா அல்லது மாற்றமில்லையா என்பதனைக் குறிப்பிடுக.**

| கொடுக்கல்வாங்கல்கள் | மூலங்கள் | தாக்கம் |
|---|---|---|
| அ- செலுத்திய குத்தகை வட்டி | உரிமையாண்மை | ................... |
| ஆ- முற்பணமாகப் பெற்ற தரகு வருமானம் | உரிமையாண்மை | ................... |
| இ- முற்பணமாகக்கொடுத்த வாடகைக்கட்டணம் | சொத்துக்கள் | ................... |
| ஈ- **வங்கிமேலதிகப்பற்றுக் காணப்பட்ட** போதிலும் வியாபாரச் சென்மதிகளுக்கு கொடுத்த காசோலை | பொறுப்பு | ................... |

**33)** பின்வரும் ஒவ்வொரு கூற்றினாலும் விபரிக்கப்படும் **மிகவும் பொருத்தமான கணக்கீட்டுப் பதிவேடுகளினைக் குறிப்பிடுக.**

| கூற்று | கணக்கீட்டுப்பதிவேடு |
|---|---|
| அ- இரட்டைப்பதிவு முறையில் பேணப்படும் **கணக்குகளின் சேர்ப்புக்களினை** உள்ளடக்கியது. | ............................. |
| **ஆ- விசேட மூலப்பதிவேடுகளில்** பதியப்படாத **கொடுக்கல்வாங்கல், நிகழ்வினை** பதியப்பயன்படுவது. | ............................. |
| **இ- நிறுவனமொன்றினால்** பேணப்படும் **தனிப்பட்ட நபர் கணக்குகளின் சேர்ப்புக்களினை** உள்ளடக்கியது. | ............................. |
| ஈ- நிறுவனமொன்றில் வேலை செய்யும் ஊழியர்களின் சம்பளங்களினை உள்ளடக்கிய பதிவு. | ............................. |

**34)** **ஹர்ஷா PLC** இன் **31.03.2021** இல் உள்ளவாறான பரீட்சை மீதியானது **சமப்படாதிருந்ததுடன்** அவ்வித்தியாசம் **தொங்கற் கணக்குக்கு மாற்றப்பட்டது.** அதனைத் தொடர்ந்து **மேற்கொண்ட பரிசோதனையின் போது** பின்வரும் **வழுக்கள் கண்டறியப்பட்டன.**

அ- 2021 **மார்ச் மாதத்திற்கான** கொள்வனவுத்திரும்பல் நாளேட்டின் மொத்தம் ரூபா.45000 ஆனது கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக்கணக்கிலும், வெளித்திரும்பல் கணக்கிலும் ரூபா.54000 **ஆகப்பதியப்பட்டது.**

ஆ- **வியாபாரச் சென்மதியாளரினால் விதித்த வட்டி** ரூபா.40000 ஆனது விதித்த வட்டிக்கணக்கில் **வரவில்** ரூபா.4000 ஆகவும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக்கணக்கில் **செலவில்** ரூபா.44000 **ஆகவும் பதியப்பட்டது.**

**மேலே தரப்பட்ட வழுக்களினைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப்பதிவுகளை எழுதுக.(விளம்பல் அவசியமில்லை)**

| வழு | விபரம் | வரவு ரூபா | செலவு ரூபா |
|---|---|---|---|
| அ. | | | |
| ஆ. | | | |

**35)** பின்வரும் **கணக்கீட்டு நடவடிக்கைக்கான மிகவும் பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கருவினைக் குறிப்பிடுக.**

| கணக்கீட்டு நடவடிக்கை | கணக்கீட்டு எண்ணக்கரு |
|---|---|
| அ- விற்பனை செய்யப்பட்ட பொருட்களினை செலவீனமாகக் காட்டுதல். | ............................ |
| ஆ- நிதிநிலைமைக்கூற்றில் வியாபார வருமதி, வியாபாரச்சென்மதியினை வெளிக்காட்டுதல். | ............................ |
| இ- கூறப்பட்ட சாதாரண பங்குகளுக்கான இறுதிப்பங்கு இலாபம் நிதிக்கூற்றுக்களில் குறிப்பொன்றாக வெளிப்படுத்தப்பட்டது. | ............................ |
| ஈ- ரூபா.10000 இற்கு குறைவாக கொள்வனவு செய்யப்பட்ட எந்தவொரு சொத்தினையும் செலவீனமாக இனங்காணுதல். | ............................ |

**36)** **கம்பனியொன்று** தொடர்பில் பின்வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பேணப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படும் **கணக்கீட்டுத்தகவல்களின் பண்புசார் குணாதிசயங்களைக் குறிப்பிடுக.**

| நிலைமை | பண்புசார் குணாதிசயம் |
|---|---|
| அ- இருப்பு கிரய முறையாக நிறையளிக்கப்பட்ட சராசரி(WAC) முறையினைப் பயன்படுத்தி இருப்புக்களினை மதிப்பிடல் | ...................................... |
| ஆ- **ஒவ்வொரு 12 மாதங்களும்** முடிவடைந்த பின்னர் கம்பனியின் **நிதிக்கூற்றுக்களினைத்** தயாரித்தல் | ...................................... |

# தொழிலாளர்கள் வஞ்சிப்பு; அமைச்சர் நிமலுக்கு கடிதம்

நுவரெலியா, செப். 15

கொரோனாவைக் காரணம் காட்டி தோட்டத் தொழிலாளர்கள் நிர்வாகிகளால் வஞ்சிக்கப்படுவதற்கு எதிராக தொழில் திணைக்களமும் தொழில் அமைச்சும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் பொதுச் செயலாளர் எஸ்.இராமநாதன் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தொழிற் திணைக்கள செயலாளர் நாயகத்துக்கும் தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கும் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளார்.

அவரது கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"இன்று கொரோனாவைக் காரணம் காட்டி தோட்ட நிர்வாகிகள் தொழிலாளர்களை பல்வேறு சிரமங்களுக்கு ஆளாக்கி வருகின்றனர். மேலும், தோட்டக் கம்பனிகள் தன்னிச்சையாக கூட்டு ஒப்பந் தத்திலிருந்து வெளியேறியுள்ளனர்.

கூட்டு ஒப்பந்தம் மூலம் தொழிலாளர்கள் அனுபவித்து வந்த பல்வேறு சலுகைகளை இன்று தொழிலாளர்கள் இழந்துள்ளனர். கூட்டு ஒப்பந்தம் ஒன்று நடைமுறையில் இல்லாத காரணத்தால் தோட்ட நிர்வா கிகள் தீர்மானிக்கும் அனைத்து முடிவுகளுக்கும் தொழிலாளர் கள் கட்டுப்பட்டு நடக்க வேண் டும் என்ற சர்வாதிகார ரீதியில் செயல்படுகின்றனர்.

தொழிலாளர்களுடைய அதிகரித்த நாள் சம்பளத்தை குறைக்கும் நோக்கோடு கூடுதலான அளவு கொழுந்து இறப்பர் பால் கொண்டு வரவேண்டும் என உத்தரவிடுகின்றனர்.

அவ்வாறு தோட்ட நிர்வாகிகள் தீர்மானிக்கும் கொழுந்து இறப்பர் பால் அளவை தொழிலாளர்களால் கொண்டு வரமுடியாவிட்டால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கின்றனர்.

சம்பளத்தை கிலோவுக்கு 40 என்ற அடிப்படையில் வழங்குதல், வேலை நாட்களைக் குறைத்தல் ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை, வேலையிலிருந்து இடைநிறுத்தல் பான்ற நடவடிக்கைகளை மேற்காள்கின்றனர்.

இவ்விடயத்தில் கம்பனி தோட்டத் துரைமார்கள் மாத்திரமின்றி அரச தோட்டங்களிலும் இவ்வாறான அத்துமீறிய செயல்கள் இடம்பெற்று வரு கின்றன. இவை சம்பந்தமாக நாம் தேசிய தொழிலாளர் ஆலோசனை சபை கூட்டங்களிலும் சுட்டிக்காட்டி வந்துள்ளோம். இதற்கு ஒரேவழி மீண்டும் கூட்டு ஒப் பந்தத்தை அமுலுக்குக் கொண்டு வருவதேயாகும்" - என்றுள்ளது. (இ)

# தடுப்பூசி பணிகள் முடியும் வரை நாட்டை முடக்கி வைக்க முடியாது

## இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவிப்பு



**கொழும்பு, செப்.15**

**"கொரோனாத் தொற்றுக்கான தடுப்பூசி செலுத்தும் பணிகள் நிறைவடையும் வரை நாடு முடக்கப்பட்டிருக்கும் என்று கூறப்படும் செய்தி உண்மைக்குப் புறம்பானது. அவ்வாறான எந்தவொரு தீர்மானத்தையும் அரசு எடுக்கவில்லை."**

- இவ்வாறு இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

"நாளாந்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும், மரணங்களின் எண்ணிக்கையும் தற்போது குறைவடைகின்றன. இந்நிலையில், ஊரடங்கைத் தளர்த்துவது தொடர்பிலேயே அரசு கவனம் செலுத்தியுள்ளது" எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

"60 வயதுக்கு மேற்பட்ட தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்ட நபர்களுக்குத் தடுப்பூசி செலுத்தும் பணிகளை இன்னும் சில தினங்களில் நிறைவு செய்ய முடியும்" எனவும் அவர் மேலும் கூறினார். (இ)

# கொரோனா தடுப்பூசி ஏற்றிக்கொள்ள இளைஞர், யுவதிகள் தயங்கவேகூடாது!

## அரசு விசேட வேண்டுகோள்

கொழும்பு, செப். 15

"கொரோனா த் தடுப்பூசி ஏற்றிக்கொண்டால் மலட்டுத் தன்மை ஏற்படும், கருதரிக்க முடியாத நிலை உருவாகும் என்றெல்லாம் பரப்படும் வதந்திகளால் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதில் இளைஞர், யுவதிகளுக்கு மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது. தேவையற்ற அச்சம் வேண்டாம். கட்டாயம் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளுங்கள்."

- இவ்வாறு இளைஞர், யுவதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"சில பகுதிகளில் இளைஞர், யுவதிகள் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கு தயக்கம் காட்டுகின்றனர். கொரோனாத் தடுப்புக்கான தடுப்பூசியை ஏற்றிக்கொண்டால் பாலியல் சக்தி குறைவடையும், கருதரிக்க முடியாத நிலை ஏற்படும் என சமூக வலைத்தளங்களில் முன்னெடுக்கப்பட்டுவரும் பிரசாரமும் இந்தத் தயக்கத்துக்கு காரணமாகும்.

இவ்வாறான தகவல்கள் போலியானவை. தடுப்பூசி ஏற்றிக்கொண்டால் மலட்டுத் தன்மை ஏற்படும் என உலகில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. எனவே, உங்களுக்கு கிடைக்கும் தடுப்பூசியை விரைவில் பெற்றுக்கொள்ளுங்கள்" - என்றார். (இ)

# பால் உற்பத்தி என்ற போர்வையில் காணிகளை சூறையாட முயற்சி!

## மலையக மக்கள் முன்னணி எதிர்ப்பு

நுவரெலியா, செப். 15

"பால் உற்பத்தி என்ற போர்வையில் எமது காணிகளை சூறையாட அரசு முயற்சி செய்து வருகின்றது. இதற்கு பின்புலத்தில் சூட்சுமமான முறையில் அரசில் இணைந்துள்ள மலையகக் கட்சிகளும் பச்சைக்கொடி காட்டி வருகின்றன. இத்தனை நாட்களும் எமது சமூகம் மாடாக தேய்ந்து காடாக கிடந்த நிலத்தை செழிப்பு நிறைந்த பகுதியாக மாற்றியது. இந்நிலையில், எம் நிலத்தை அரசு பால் உற்பத்தி என்ற போர்வையில் தனியாருக்குத் தாரை வார்த்துக் கொடுக்க இடமளிக்கக்கூடாது."

- இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் அ.லோரன்ஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"எத்தனையோ ஆர்வமுள்ள இளைஞர்கள் கால்நடைகளை வளர்க்க முயன்று கொண்டிருக் கின்றனர். கொரோனா கோரத் தாண்டவத்தால் பல இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி தத்தளித்து கொண்டிருக்கின்றனர். அவர்களிடம் கடன் அடிப் படையிலோ அல்லது வேறெதாவது வழியிலியோ பால் மாடுகளையோ அல்லது வேறு கால்நடைகளையோ வழங்கும் பட்சத்தில் எமது இளைஞர்களின் பொருளாதாரத்தையும் அதே நேரத்தில் பால் உற்பத்திகளையும் நாட்டில் அதிகரிக்க முடியும்.

நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் எமது தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களைப் போல் பால் உற்பத்தியிலும் பால் சார்ந்த பொருட்களின் தட்டுப்பாட்டை நீக்கும் முதுகெழும்பு சக்தியாகவும் எமது சமூகம் மாறும் என்பதில் எவ்வித ஐயமும் கிடையாது.

அதைவிடுத்து தனியாருக்கு நிலங்களையும் நிலம் சார்ந்த இயற்கை வளங்களையும் சேர்த்து தாரைவார்த்துக் கொடுக்க நினைக்கும் இந்த அரசையும் அதற்குத் துணை போகும் நமது சமூக அரசியல் பிரதிநிதிகளையும் மக்கள் இனங்கண்டுகொள்ள வேண்டும். - என்றார். (இ)

# மேலும் 733 பேர் கைது!

கொழும்பு, செப். 15

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட் டின் கீழ் மேலும் 773 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைது செய்யப்பட்டோரின் எண்ணிக்கை 71 ஆயிரத்து 467 ஆக உயர்வடைந்துள்ளது.

அத்துடன், தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறியமை தொடர்பில் மேலும் 124 வாகனங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (இ)

# மோ. சைக்கிள் விபத்தில் காயமடைந்த முதியவர் சிகிச்சை பலனின்றி மரணம்

யாழ்ப்பாணம், செப்.15

உரும்பிராய் பிரதேசத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த முதியவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மணியந்தோட்டத்தைச் சேர்ந்த கே.குணரத்ன (வயது 67) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த முதியவர் ஊரெழு பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் தொழில் நிமிர்த்தம் சென்று வீடு திரும்பிய வேளை உரும்பிராயில் எதிரே வந்த மற்றுமொரு மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.எனினும், அவர் அங்கு சிறிது நேரத்தில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (இ - 03)

# வெளிநாடு சென்ற துமிந்த!



கொழும்பு, செப். 15

மரணதண்டனைக் கைதியாக இருந்து பொதுமன்னிப்பில் விடுதலையான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா வெளிநாடு சென்றுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

2012ஆம் ஆண்டு கொழும்பு, கொலன்னாவ பிரதேசத்தில் சக கட்சி உறுப்பினர் ஒருவருடன் ஏற்பட்ட மோதலில் முன்னாள் அமைச்சர் பாரத லக்ஸ்மன் கொல் லப்பட்டார். படுகாயமடைந்த துமிந்த சில்வா தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்தார். இந்நிலையில், நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்ட வழக்கு விசாரணைகளில் குற்றம் நிரூபிக்கப்பட்டு துமிந்த சில்வாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இதையடுத்து தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச சில மாதங்களுக்கு முன்னர் துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு வழங்கி விடுவித்தார். பின்னர் அவருக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் பதவியும் வழங்கப்பட்டது. (இ)

# பேரனின் சைக்கிளிலிருந்து தவறி வீழ்ந்த மூதாட்டி வைத்தியசாலையில் உயிரிழப்பு

தென்மராட்சி, செப். 15

பேரனின் சைக்கிளில் பயணித்த மூதாட்டி ஒருவர் தவறி வீழ்ந்து மயங்கியதில் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

கொடிகாமம், மந்துவில் கிழக்கைச் சேர்ந்த பொன்னுத்துரை ஆசையம்மா என்னும் 80 வயதுடைய மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

அவர் மந்துவிலில் உள்ள மகளின் வீட்டில் இருந்து பேரனின் சைக்கிளில் இரண்டாவது மகளின் வீடு நோக்கிப் பயணித்த வேளை வீதியில் தவறி வீழ்ந்தமையால் மயக்கம் அடைந்துள்ளார்.

அவர் உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும், அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (இ-3)



# ஆப்கானிலிருந்து தப்பிக்க பல்லாயிரம் மக்கள் முயற்சி!

காபூல், செப். 15

தலிபான்களின் ஆட்சிக்குள் ஆப்கானிஸ்தான் மீண்டும் சென்றதைத் தொடர்ந்து அந்த நாட்டில் இருந்து பல ஆயிரம் பேர் தப்பிச்சென்று பாகிஸ்தான் எல்லை அருகே காத்திருப்பது செயற்கைகோள் படங்கள் மூலம் உறுதியாகியுள்ளது.

ஆப்கானிஸ்தானின் தெற்கு கந்தஹார் மாகாணத்தின் ஸ்பின்போல்டாக் மாவட்டத்தில் உள்ள சமன் எல்லையில் பல்லாயிரக்கணக்கானோர் குவிந்துள்ளனர். தங்கள் குழந்தைகள் மற்றும் உடைமைகளை வைத்துக்கொண்டு பாகிஸ்தான் எல்லையில் அவர்கள் நீண்ட நேரம் நிற்பது உறுதியாகியுள்ளது.

இந்த செயற்கைகோள் படம் கடந்த 6ஆம் திகதி எடுக்கப்பட்டதாகும். அந்த மக்கள் பாகிஸ்தானுக்குள் தஞ்சம் புகுந்தார்களா? என்பது தெரிய வரவில்லை.

காபூல் விமான விமான நிலையம் மீண்டும் தலிபான்கள் வசமானதால் அங்கு சென்று தப்பிச் செல்ல முடியாதநிலை காணப்படுகின்றது. இதனால் பாகிஸ்தான் எல்லைகளான டோர்காக், ஸ்பின்போல்டாக், தஜிகிஸ்தான் எல்லையான ஷிர்கான், ஈரான் எல்லையான இஸ்லான் குவாலா ஆகிய பாதைகள் மூலம் ஆப்கானியர்கள் தப்பி வருகின்றனர். (ஐ)

## காலநிலை மாற்றம்:

# எங்களுக்கு எதிர்காலம் இல்லை! 60சதவீத இளைஞர்கள் கவலை!!

லண்டன்,செப்.15

காலநிலை மாற்றம் பற்றி அரசாங்கங்கள் போதுமானளவு செயல்படத் தவறிவிட்டன, தங்களுக்கு எதிர்காலம் இல்லை என்று 60வீதமான இளைஞர் கள் உணர்கிறார்கள் - கவலை கொள்கின்றனர் என்று உலகளா விய ஆய்வு ஒன்றில் தெரிய வந்துள்ளது.

இது, ஒரு புதிய உலகளாவிய கணக்கெடுப்பு பல இளைஞர்கள் காலநிலை மாற்றம் பற்றி உணரும் கவலையின் ஆழத்தை விளக்குகிறது. கேள்விக்குட்பட்டவர்களில் 45 வீதத்துக்கும் அதிகமானோர், தட்பவெப்ப நிலை குறித்த உணர்வுகள் தங்கள் அன்றாட வாழ்க்கையை பாதிக்கும் என்று கூறினர். அவர்களில் முக்கால்வாசி பேர் எதிர் காலத்தை பயமுறுத்துவதாக நினைத்ததாகக் கூறினர். பாதிக்கும் மேற்பட்டவர்கள் (56வீதம்) மனித நேயம் அழிந்துவிட்டது என்று நினைக்கிறார்கள்.

மூன்றில் இரண்டு பங்கு வருத்தம், பயம் மற்றும் கவலையை உணர்கிறது. பலர் பயம், கோபம், விரக்தி, துக்கம் மற்றும் அவமானம் - நம்பிக்கையையும் உணர்ந்தனர்.

16 வயதான ஒருவர் கூறினார்: "இது இளைஞர்களுக்கு வித்தியாசமான - எங்களுக்கு, கிரகத்தின் அழிவு தனிப்பட்டதாகும்."

வானிலை தொடர்பான பேரழிவுகள் ஐந்து மடங்கு அதிகரிக்கும் காலநிலை மாற்ற உச்சி மாநாடு கிரகத்திற்கான "உருவாக்க அல்லது உடை" 10 நாடுகளின் கணக்கெடுப்பு ஐந்து பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பாத் பல்கலைக்கழகத்தால் வழிநடத்தப்பட்டது. இது பிரசாரம் மற்றும் ஆராய்ச்சி குழு ஆவாஸால் நிதியளிக்கப்படுகிறது. 16 முதல் 25 வயதுக் குட்பட்ட 10 ஆயிரம் நபர்களின் பதில்களுடன் இது மிகப்பெரியது என்று கூறுகிறது.



கேள்வி கேட்கப்பட்டவர்களில் பலர் தங்களுக்கு எதிர்காலம் இல்லை என்றும், மனிதநேயம் அழிந்துவிட்டது என்றும், அரசாங்கங்கள் போதுமான அளவு பதிலளிக்கத் தவறிவிட்டன எனவும் உணர்கிறார்கள். பலர் அரசியல்வாதிகளாலும் பெரியவர்களாலும் காட்டிக்கொடுக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு, கைவிடப்பட்டதாக உணர்கிறார்கள்.

அரசாங்கங்கள் செயல்படத் தவறியமையால் இளைஞர்கள் குழப்பமடைந்துள்ளனர் என்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். சுற்றுச்சூழல் அச்சங்கள் "அதிக எண்ணிக்கையிலான இளைஞர்களைப் பெரிதும் பாதிக்கிறது" என்று அவர்கள் கூறுகிறார்கள்.

காலநிலை மாற்றத்தின் மீதான நீண்டகால மன அழுத்தம், மன மற்றும் உடல் பிரச்னைகளின் அபாயத்தை அதிகரிக்கிறது என்று அவர்கள் பராமரிக்கின்றனர். கடுமையான வானிலை நிகழ்வுகள் மோசமடைந்தால், மனநல பாதிப்புகள் தொடரும். குறிப்பாக இளைஞர்கள் பருவநிலை அச்சத்தால் பாதிக்கப்படுவதால் அவர்கள் உளவியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும், உடல் ரீதியாகவும் வளர்ந்து வருகின்றனர் என அறிக்கை கூறுகிறது.(ஐ)

## வடகொரிய ஏவுகணை விவகாரம்;

# ஜப்பான், அமெரிக்கா, தென்கொரியா ரோக்கியோவில் கூடி பேச்சு நடத்தின



ரோக்கியோ, செப். 15

வடகொரியாவின் ஏவுகணை மற்றும் அணுசக்தி திட்டங்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது? என்பது குறித்து ஜப்பான், அமெரிக்கா மற்றும் தென்கொரியாவின் முக்கிய அணுசக்தி தூதர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை ரோக்கியோவில் ஒன்றுகூடி பேச்சு நடத்தினர்.

புதிய நீண்டதூர ஏவுகணை சோதனையை நடத்தியதாக வட கொரியா அறிவித்து ஒரு நாள் கழித்து இந்தப் பேச்சு இடம்பெற்றது.

சனி மற்றும் நேற்று ஞாயிற்றுக்கிழமைகளில் பரிசோதிக்கப்பட்ட இந்த ஏவுகணைகள் 1,500 கிலோ மீற்றர் தூரம் சென்று இலக்கைத் தாக்கக் கூடியவை என வட கொரிய அரச ஊடகம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை செய்தி வெளியிட்டது.

இந்நிலையில் வட கொரியாவின் இந்த ஏவுகணை சோதனை ஜப்பான், அமெரிக்கா மற்றும் தென் கொரியா இடையிலான நெருங்கிய தொடர்பு மற்றும் ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதாக தென் கொரியாவுக்கான அமெரிக்க விசேட தூதர் சுங் கிம் தெரிவித்துள்ளார்.

வட கொரியாவின் அச்சுறுத்தல்களைச் சமாளிக்க இராஜதந்திர ரீதியாக இணைந்து செயலாற்ற அமெரிக்கா எப்போதுமே தயாராக இருப்பதாகவும் ஜப்பான் மற்றும் தென் கொரிய பிரதிநிதிகளுடன் பேசிய விசேட தூதர் சுங் கிம் கூறினார்.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே-இன் ஆகியோர் 2018 இல் வட கொரிய தலைவர் கிம் ஜாங் - உன்னை சந்தித்துப் பேச்சு நடத்தினர். இதில் அணு ஆயுத தவிர்ப்பு முக்கிய குறிக்கோளாக இருந்தது. எனினும், இந்தப் பேச்சுகள் தோல்வியில் முடிந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# தமது உரிமைகளுக்காக போராடும் ஆப்கான் பெண்கள்மீது சாட்டை அடி!

காபூல், செப். 15

ஆப்கானிஸ்தானில் பல முக்கிய இடங்களில் பெண்கள் தங்கள் உரிமைகளை கோரி போராட்டம் நடத்திவரும் சூழலில் தலிபான்கள் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த நிலையில், சர்வதேச ஊடகங்களில் வெளியான செய்திகளின்படி, "ஆப்கானிஸ்தானில் மாசர் ஐ ஷரிப் நகரத்தில் தங்களுக்கான உரிமைகள் வேண்டி பெண்கள் பலர் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அங்கிருந்த தலிபான்கள் அவர்களைச் சாட்டையால் தாக்கினர். இதில் வலி தாங்க முடியாமல் பெண்கள் அங்கிருந்து ஓட்டம் பிடித்தனர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் காபூல் பல்கலைக்கழகத்தில் நடந்த தலிபான்கள் ஆதரவுக் கூட்டத்தில் பெண்களைக் கட்டாயப்படுத்தி, தலிபான்கள் கலந்து கொள்ள வைத்தனரெனக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதற்கு தலிபான்கள் கருத்து தெரிவிக்கவில்லை.

ஆப்கானிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறியமையை தொடர்ந்து அந்த நாடு முழுமையாக தலிபானின் ஆதிக்கத்தின்கீழ் சென்றமை ஏற்கனவே தெரிந்ததே. (ஐ)

# தடுப்பூசி எதிர்ப்பாளரின் மகள் கொரோனா தொற்றுக்கு பலி!

## தவறிழைத்தாரென கதறி அழுதார்!

வாஷிங்டன், செப். 15

அமெரிக்காவில் கொரோனா தடுப்பூசியை எதிர்த்து வந்த இளம் பெண்ணின் 4 வயது குழந்தை தொற்றால் பாதிக்கப்பட்டு ஒரே இரவில் உயிரிழந்தது.

அமெரிக்காவின் ரெக்சாஸ் மாகாணத்தின் கல்வேஸ்டன் கவுன்டியைச் சேர்ந்தவர் காரா ஹார்வுட். இவர் தொடர்ந்து கொரோனா தடுப்பூசியை எதிர்த்து வந்துள்ளார். பல இடங்களில் தடுப்பூசிக்கு எதிராகப் பேசியும் வந்துள்ளார். அவர் கொரோனா தடுப்பூசி பெறாத நிலையில் அவருக்கு தொற்று ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து அவரின் குடும்பத்திலுள்ள அனைவருக்கும் தொற்று ஏற்பட்டது. இந்த நிலையில் அவரின் கடைசி மகளான கேளி குக்கும் தொற்றால் பாதிக்கப்பட்டார்.

அவருக்கு மருந்துகளை தாய் கொடுத்துள்ளார். ஆனால், மறுநாளே குழந்தை இறந்து விட்டது. குழந்தைக்கு வேறு நோய்கள் எவையும் அடையாளம் காணப்படவில்லை. கொரோனா தொற்றால் மட்டுமே பாதிக்கப்பட்டு உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், "தடுப்பூசிக்கு எதிரான எனது கொள்கை முட்டாள்தனமானது. நான் அப்படி செய்திருக்கக் கூடாது. இனிமேல் எதையும் மாற்ற முடியாது" என்று கண்ணீருடன் தொலைக்காட்சி ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்துள்ளார் காரா.

மேலும் சுகாதாரத் துறையினர் மேற்கொண்ட ஆய்வில் குழந்தை கேளிக்கு அவரது தாயார் மூலமே தொற்று பரவியதும் உறுதியாகியுள்ளது. (ஐ)



# வோக்ஸ்க்கு பதில் பென்!

புதுடில்லி, செப். 15

அவுஸ்திரேலியாவை சேர்ந்த இடதுகை வேகப்பந்து வீச்சாளர் பென் வோர்ஷூயிஸை டில்லி கப்பிட்டல்ஸ் அணி ஒப்பந்தம் செய்துள்ளது.

ஐ.பி.எல். இருபது - 20 தொடரின் மிகுதி போட்டிகள், ஐக்கிய அரபு இராச்சியத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இந்தப் போட்டிகளிலிருந்து இங்கிலாந்து வீரர்களான பெயர்ஸ்ரோ, டேவிட் மலன், கிறிஸ்வோக்ஸ் ஆகியோர் விலகினர்.

சகலதுறை வீரரான கிறிஸ் வோக்ஸ் டில்லி அணிக்காக விளையாடி வந்திருந்தார். இதனால், அவருக்குப் பதிலாகவே பென் வோர்ஷூயிஸை டில்லி அணி ஒப்பந்தம் செய்துள்ளது.

27வயதான பென் வோர்ஷூயிஸ் 82 இருபது - 20 போட்டிகளில் விளையாடி 100 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார். பிக் பாஷ் லீக் தொடரில் சிட்னி சிக்ஸர்ஸ் அணியில் பென் விளையாடி வருகிறார். இதுவரை சிட்னி சிக்ஸரில் 69 போட்டிகளில் விளையாடி 85 விக்கெட்களை பென் வீழ்த்தியுள்ளார். பிக்பாஷ் லீக் தொடரில் அதிக விக்கெட் வீழ்த்திய 6ஆவது வேகப்பந்துவீச்சாளர் பென் ஆவார்.

தற்போது ஐ.பி.எல். புள்ளிப்பட்டியலில் 8 போட்டிகளில் 12 புள்ளிகளுடன் முதலிடத்தில் டில்லி கப்பிட்டல்ஸ் அணி இருக்கிறது. வரும் 22ஆம் திகதி நடக்கும் ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் அணியுடன் டில்லி கப்பிட்டல்ஸ் மோதுகிறது.

இதேவேளை, டேவிட் மலனுக்கு பதிலாக தென்னாபிரிக்காவின் எய்டன் மார்க்ரமை பஞ்சாப் கிங்ஸ் சேர்க்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# டெஸ்டுக்கு பதில் இருபது - 20 தொடர்!

## இங்கிலாந்துடன் இந்தியா பேச்சு

புதுடில்லி, செப். 15

இங்கிலாந்து - இந்திய அணிகள் மோதவிருந்த ஐந்தாவது டெஸ்ட் போட்டி இரத்து செய்யப்பட்டது. இந்த நிலையில், அந்தப் போட்டிக்கு பதிலாக இருபது - 20 தொடர் ஒன்றில் விளையாட தயார் என்று இந்திய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இதனை இங்கிலாந்து கிரிக்கெட் சபை விரும்பாது விடின் டெஸ்ட் போட்டி யில் விளையாடவும் சம்மதம் என்றும் அந்த சபை கூறியுள்ளது.

இங்கிலாந்து சென்ற இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வந்தது. இந்தத் தொடரில் 2 -1 என்ற கணக்கில் இந்திய அணி முன்னிலையில் இருந்த நிலையில், கொரோனா தொற்று காரணமாக இறுதிப் போட்டியில் இந்தியா விளையாட மறுத்து விட்டது.

இந்த நிலையில், நின்றுபோன போட்டியை நடத்தா விடின் தமக்கு நட்டம் ஏற்படும் என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்திருந்தது.

இந்த நிலையிலேயே, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை, அடுத்த வருடம் தொடருக்காக இங்கிலாந்து செல்லும்போது, விளையாடவுள்ள 3 ஒருநாள், 3 இருபது - 20 தொடர்களின்போது மேலதிகமாக இரு இருபது - 20 போட்டிகளில் விளையாட தயார் என்றும், அல்லது இரத்து செய்யப்பட்ட டெஸ்ட் போட்டியை விளையாடலாம். இரண்டில் ஒன்றை தெரிவு செய்வது இங்கிலாந்தின் விருப்பம் என்றும் இந்தியா கூறியுள்ளது. (ஐ)

# பாகிஸ்தானின் பயிற்றுநர்களாக ஹைடன், பிலாண்டர் ஒப்பந்தம்!

இஸ்லாமாபாத், செப். 15

அவுஸ்திரேலியாவின் முன்னாள் வீரர் மத்தியூ ஹைடன், தென்னாபிரிக்க வேகப்பந்துவீச்சாளர் வெர்னன் பிலாண்டர் ஆகியோர் பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளர்களாக ஒப்பந்தமாகியுள்ளனர்.

பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளர் மிஸ்பா உல் ஹக், பந்துவீச்சு பயிற்றுவிப்பாளர் வக்கார் யூனுஸ் ஆகியோர் தமது பதிவிக் காலம் முடியும் முன்னர் - கடந்த ஆறாம் திகதி தமது பதவிகளை துறந்தனர்.

இதைத் தொடர்ந்து இருபது - 20 உலகக் கிண்ணத்துக்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டது.





இதைத் தொடர்ந்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவராக நேற்று தெரிவான ரமீஸ் ராஜா உலகக் கிண்ணத்துக்கான பாகிஸ்தான் பயிற்றுவிப்பாளர்களை நேற்றைய தினமே அறிவித்தார்.

இதன்படி, துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக மத்தியூ ஹைடன், பந்துவீச்சு பயிற்றுவிப்பாளராக வெர்னன் பிலாண்டர் ஆகியோர் ஒப்பந்தம் செய்யப்படுகின்றனர். (ஐ)

# 'அப்பர் கட்' ரெய்லர் ஓய்வு பெற்றார்!



ஹராரே, செப். 15

சிம்பாவே வீரர் பிரண்டன் ரெய்லர் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். கிரிக்கெட்டில் 'அப்பர் கட்' எனப்படும் துடுப்பாட்ட முறையை சிறப்பாகக் கையாண்ட ஒரே வீரர் இவராவார்.

2004ஆம் ஆண்டு சிம்பாவே அணிக்காக அறிமுகமான ரெய்லர் 34 டெஸ்ட், 205 ஒருநாள், 45 இருபது - 20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

இவர், அயர்லாந்துக்கு எதிராக தனது கடைசி சர்வதேச போட்டியில் விளையாடினார். அயர்லாந்து வெற்றி பெற்ற இந்தப் போட்டியில் வெறும் 7 ஓட்டங்களே அவர் பெற்றார். இதனால், ஒருநாள் கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள் எடுத்த சிம்பாவே அணியின் முன்னாள் வீரர் அண்டி பிளவரின் சாதனையை அவர் முறியடிக்க தவறியிருந்தார். இந்த சாதனையை முறியடிக்க ரெய்லருக்கு 110 ஓட்டங்கள் தேவைப்பட்டிருந்தது.

எனினும், ஒருநாள் போட்டியிலும், சர்வதேச போட்டிகளிலும் சிம்பாவே அணிக்காக அதிக சதங்கள் அடித்த வீரர் என்ற சாதனை ரெய்லர் வசமே உள்ளது. அவர் 11 ஒருநாள் சதங்களையும், 17 சர்வதேச சதங்களையும் பெற்றுள்ளார்.

இதேவேளை, சர்வசேத போட்டிகளில் அதிக ஓட்டங்களை குவித்த சிம்பாவே வீரர்கள் பட்டியலில், முதலிரு இடங்களில் அண்டி பிளவர், கிராண்ட் பிளவர் சகோதரர்கள் உள்ளனர். மூன்றாவது இடத்தில் பிரண்டன் ரெய்லர் உள்ளார். இவர் 318 இனிங்ஸ்களில் 9,938 ஓட்டங்களை குவித்துள்ளார். அத்துடன், 106 சிக்ஸர்களை விளாசி அதிக சிக்ஸர்கள் அடித்த சிம்பாவே வீரராகவும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# ஆறாவது இடத்திற்கு பின்தங்கினார் நடால்!

லண்டன், செப். 15

ரென்னிஸ் உலகின் முன்னணி வீரரான ரபேல் நடால் தரவரிசையில் ஆறாவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளார்.

20 கிராண்ட்ஸ்லம் பட்டங்களை வென்ற அவர் பிரெஞ்சு ஓப்பனில் அரையிறுதியில் தோல்விடைய டைந்தார். இதைத் தொடர்ந்து காயத்தால் அவதிப்பட்ட அவர் அடுத்து வந்த தொடர்களில் விலகினார்.

இந்த நிலையிலேயே அவர் தரவரிசையில் ஆறாம் இடத்திற்கு பின்தங்கப்பட்டுள்ளார்.

அமெரிக்க ஓப்பனில் சம்பியன் பட்டத்தை தவறவிட்டாலும், ஜொகோவிச் தொடர்ந்து முதல் இடத்தில் நீடிக்கிறார்கள். டொமினிக் தீம் 6ஆவது இடத்தில் இருந்து 8ஈவது இடத்திற்கு பின்தங்கியுள்ளார்.

அமெரிக்க ஓப்பனை வென்ற ரஷ்ய வீரர் டேனில் மெட்வேடேவ் 2ஆவது இடத்திலும், ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ் 3ஆவது இடத்திலும், ஒலிம்பிக் சம்பியன் அலெக்சாண்டர் ஸ்வெரேவ் 4ஆவது இடத்திலும் உள்ளனர். (ஐ)

# கொரோனா ஒழிப்பு செயலணி கூட்டத்திலேயே ஊரடங்கு சட்டத்தை நீக்குவது தொடர்பில் முடிவு

## அமைச்சரவை இணை பேச்சாளர் தகவல்



கொழும்பு, செப்.15

"நாட்டில் தற்போது அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு எப்போது நீக்கப்படும் என்பது தொடர்பில் கொரோனா ஒழிப்பு செயலணிக் கூட்டத்திலேயே தீர்மானிக்கப்படும்."

- இவ்வாறு அமைச்சரவை இணைப்பேச்சாளரும் அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய ஊடகவியலாளர் மாநாட்டின்போது, நாட்டில் தற்போது உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு எப்போது தளர்த்தப்படும் என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி அதிகாலை 4 மணி வரை அமுலில் இருக்கும். அதில் மாற்றம் இருப்பின் அது குறித்து அறிவிக்கப்படும்.

தனிமைப்படுத்தல் ஊரடங்கால் தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் மரண எண்ணிக்கை குறைவடைந்துள்ளன" - என்றார். (இ)

# இளைஞர் சுட்டுக்கொலை; குடும்பஸ்தர் ஒருவர் கைது

மாத்தறை, செப். 15

மாத்தறை மாவட்டம், கொட்டவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி 29 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நபரின் படுகொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மிதிகம, அஹங்கம பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ)

# ஐ.நாவை இனியும் ஏமாற்ற முடியாது!

## அரசிடம் சம்பந்தன் சுட்டிக்காட்டு



**கொழும்பு, செப்.15**

**பொய்யான வாக்குறுதிகளை வழங்கி ஐ.நாவையும் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றலாம் என்று இலங்கை அரசு இனியும் எண்ணக்கூடாது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.**

இலங்கை அரசை சர்வதேச கண்காணிப்புப் பொறிக்குள் சிக்கவைத்துக் கடும் அழுத்தங்களைக் கொடுத்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையாரின் வாய்மூல அறிக்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

பொறுப்புக்கூறல் கடமையிலிருந்து இலங்கை அரசு ஒருபோதும் தப்ப முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐ.நா. தீர்மானத்தின் பரிந்துரைகளையும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையாரின் கோரிக்கைகளையும் இலங்கை அரசு நிறைவேற்றியே தீர வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (இ)

# மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 02 - 05 - 1957 | 10 - 09 - 2021 |

## ஆறுமுகம் சிறிதரன் (J.P.)

*(ஓய்வுபெற்ற அதிபர்)*

வாழைச்சேனையைப் பிறப்பிடமாகவும் பரந்தன் மற்றும் ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிறிதரன் கடந்த (10.09.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - சேதுப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற கதிர்காமு - பறுவதம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அருந்தவநேசம் மற்றும் அன்னலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், சஜந்திரன் (சமூர்த்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் கரைச்சி), பவேந்திரன் (ஆசிரியர் தி/மூதூர் மத்தியகல்லூரி), சுஜந்திரன் (பொறியியலாளர் மட்டக்களப்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவயோகராஜினி, சிறிநகுலன் (கனடா), சிறிவரதராஜன் (கனடா), அமரர் சிறிவேந்தன், தவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கவிச்செல்வி, றிதுஸா, டினுசனா ஆகியோரின் அன்பு மாமனாரும், டயனிக்கா, கஜானன், அஸ்மியா, சோபிலக்ஷித் ஆகியோரின் பாசமிகு பேரனும், அமரர்களான நல்லம்மா, செல்லப்பா, சின்னத்துரை, அப்பையா, இரத்தினசிங்கம், தர்மலிங்கம், தவமணிமற்றும் பத்மநாதன், தாமோதரம்பிள்ளை (பிரான்ஸ்), துரைசிங்கம், குலசிங்கம், ஆறுமுகம், புவனேஸ்வரி, தங்கம்மா, சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், அமரர் குணம், இந்திரா(கனடா), ரதிமலர்(கனடா), குணபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (16.09.2021) வியாழக்கிழமை அன்று கோம்பையன்மணல் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
*கபில் - 0753905692*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

# நகர சபை உப தலைவர் கொரோனாவால் மரணம்

கேகாலை, செப். 15

கேகாலை நகர சபையின் உப தலைவர் லலித் ஜெயசாந்த (வயது 50), கொரோனாத் தொற்றால் உயிரிழந்தார்.

இவர் தொற்றுக்குள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று மரணமடைந்தார். (இ)

# 'சன்ஷைன்' சுத்தா கொலை: மூன்று சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, செப். 15

போதைப்பொருள் கடத்தல்காரரும் பாதாள உலகக்குழு உறுப்பினருமான சன்ஷைன் சுத்தாவின் கொலையுடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சந்தேகநபர் வெலிகம பகுதியில் பாதாள உலகக் குழு உறுப்பினர் ஒருவரின் சாரதியாகச் செயற்பட்டவர் என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளார்.

அமில பிரசங்க ஹெட்டிஹேவா எனப்படும் சன்ஷைன் சுத்தா கடந்த 3 ஆம் திகதி மிரிஸ்ஸ - ஹேன்வலவில் அமைந்துள்ள, பெண் ஒருவரின் வீட்டுக்குச் சென்று திரும்பிய சந்தர்ப்பத்தில் கொட்டவில - வரக்காபிட்டிய பகுதியில் வைத்து சுட்டுக்கொல்லப் பட்டார்.

சம்பவம் தொடர்பில் இது வரை மூன்று சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சன்ஷைன் சுத்தாவுடன் தொடர்பில் இருந்த பெண்ணின் கணவரும் கொலைக்கு உதவியமை மற்றும் சதித்திட்டம் தீட்டியமை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# லொறி சாரதி விபத்தில் பலி

மாத்தளை, செப். 15

மாத்தளை மாவட்டம், பெலிகமுவ பிரதேசத்தில் இரு லொறிகள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் உயிரிழந்தார். அத்துடன் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

விபத்தில் இரு லொறிகளின் சாரதிகள் உட்பட நால்வர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் லொறியொன்றின் சாரதி சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

வாழைச்சேனைப் பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயது நபரே உயிரிழந்துள்ளார். (இ)

# மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட குடும்பஸ்தர் நீரில் மூழ்கி மரணம்

இரத்தினபுரி, செப். 15

இரத்தினபுரி மாவட்டம், நிவித்திகல - நிரிஎல்ல கங்கையில், மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

நிரிஎல்ல வத்த பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயது குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நீரில் மூழ்கிய நபரைப் பிரதேச மக்கள் மீட்டு, நிவித்திகல வைத்தியசாலையில் சேர்த்த போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார். சடலம், பிரேத பரிசோதனைக்காக நிவித்தகல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நிவித்திகல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## வெளியக...

மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமானது. முதல்நாளில் தனது வாய்மொழிமூல அறிக்கையை மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையார் முன்வைத்திருந்தார். இதற்கு பதிலளிக்கும் விதமாக நேற்று இலங்கை அரசு பதிலளித்தது. இதன்போதே வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "எமது அரசியலமைப்பு மற்றும் சர்வதேசக் கடப்பாடுகளுக்கு இணங்க, மனித உரிமைகள் முறைமையால் கட்டளையிடப்பட்டுள்ள இந்த சபை மற்றும் ஐ. நா. சபையுடனான எமது வலுவான மற்றும் தொடர்ச்சியான ஒத்துழைப்பை மீண்டும் வலியுறுத்துவதன் மூலம் எனது உரையை ஆரம்பிக்கின்றேன்.

**ஜனநாயக மரபில் உறுதி**

தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை தனது மண்ணில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை ஒழித்தது. நாம் எமது மக்களின் நலனுக்காக சமாதானம், பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை மீட்டெடுத்துள்ளோம். எமது ஜனநாயக மரபுகளை நாம் உறுதியாகப் பேணி வந்தோம் - மிகவும் அண்மையில் இடம்பெற்ற 2019ஆம் ஆண்டில் ஜனாதிபதி தேர்தல் மற்றும் 2020ஆம் ஆண்டில் பாராளுமன்றத் தேர்தல்களில், அதிக அளவிலான வாக்காளர்களின் பங்கேற்புடன் வழக்கமான இடைவெளியில் தேர்தல்கள் நடத்தப்பட்டன. மாகாண சபை தேர்தலை விரைவாக நடத்துவதற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.

'குணப்படுத்துதல்' என்ற கண்ணோட்டத்தில் மோதலுக்குப் பிந்தைய மீட்பு நடவடிக்கைகளை கையாள்கின்றோம். மிகவும் அண்மையில், தீவிரமான பயங்கரவாதக் குற்றங்களில் குற்றம் சாட்டப்பட்ட 16 விடுதலைப் புலிகளுக்கு ஜனாதிபதியனால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது. மோதலுக்குப் பிந்தைய கண்ணிவெடி அகற்றல், புனரமைப்பு மற்றும் மீள்குடியேற்றத் திட்டங்களின் வெற்றியானது, தேசிய நல்லிணக்கத்திற்கு பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளது.

பேரழிவுகளை ஏற்படுத்தும் கோவிட் - 19 தொற்றுநோயின் நாளாந்த சவால்கள் இருந்தபோதிலும், உள்ளக செயன்முறைகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தை நான் முன்னிலைப்படுத்துகின்றேன்:

காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகம் அதன் முக்கிய செயல்பாடாக, ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து காணாமல் போனவர்களின் பட்டியலை இறுதி செய்கின்றது, இழப்பீட்டு அலுவலகம் இந்த ஆண்டு 3,775 கோரிக்கைகளை செயலாக்கியுள்ளது, தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் அதன் 08 அம்ச செயல்திட்டத்தைத் தொடர்கின்றது.

தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு அதன் ஆணையை நிறைவேற்றுகின்றது, நிலையான அபிவிருத்தி இலக்கு 16இன் கீழான வழிநடத்தல் குழுவொன்று சமாதானம், நீதி மற்றும் வலுவான நிறுவனங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**வழக்குகளை விரைவுபடுத்த குழு**

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மறுபரிசீலனை செய்வதற்கும், சர்வதேச விதிமுறைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப கொண்டுவரவும் அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்த மாத இறுதியில் அமைச்சரவையில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள வழக்குகளை விசாரணை செய்யவும், இதுபோன்ற வழக்குகளை விரைவாக சமாளிப்பதற்கான பரிந்துரைகளை வழங்கவும் ஆலோசனை குழுவொன்று நியமிக்கப்பட்டது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குகளை விரைந்து தீர்ப்பதும் நடைபெற்று வருகின்றது.

பொறுப்புக்கூறல் மற்றும் காணாமல் போனவர்கள் தொடர்பான பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவும், முந்தைய ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை மறுபரிசீலனை செய்வதற்காகவும் உயர் நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் விசாரணை ஆணைக்குழு அமைக்கப்பட்டது. விசாரணை ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தது. இறுதி அறிக்கை அடுத்த 6 மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்படும்.

நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கு, நுண்ணறிவுகளைப் பெறுவதற்கும், ஆதரவைப் பயன்படுத்துவதற்கும் நாங்கள் சிவில் சமூகத்துடன் தீவிரமான ஈடுபாட்டைப் பராமரிக்கின்றோம்.

**ஈஸ்டர் தாக்குதல் விசாரணை தொடர்கிறது**

"2019 ஈஸ்டர் தினத்தில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலின் குற்றவாளிகள் மீது இலங்கை தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து, அனைத்து விதமான சட்ட நடைமுறைகளையும் பின்பற்றி வருகின்றது. பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதிலும், அனைத்து மதங்களைச் சார்ந்த இலங்கையர்களைப் பாதுகாப்பதிலும் எப்போதும்போல நாம் விழிப்புடன் இருப்போம்.

தீர்மானம் 46/1 ஆல் நிறுவப்பட்ட எந்தவொரு வெளியக முன்முயற்சிகளுக்கான முன்மொழிவையும் நாங்கள் நிராகரிக்கும் அதேநேரத்தில், சம்பந்தப்பட்ட விடயங்களில் உள்ளக செயன்முறைகள் கையாளப்படுகின்றன. தீர்மானம் 30/1 இனால் நாங்கள் அனுபவித்தபடி இது எமது சமூகத்தைத் துருவப்படுத்திவிடும். மனித உரிமைகள் பேரவை அதன் ஸ்தாபகக் கொள்கைகளைக் கடைபிடிக்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட நாட்டின் ஒத்துழைப்பு இல்லாமல் தொடங்கப்பட்ட வெளிப்புற முயற்சிகளால் அந்த நாட்டினால் குறிப்பிட்ட இலக்குகளை அடைந்து கொள்ள முடியாது என்பதுடன், அது அரசியல் மயமாக்கலுக்கு உட்படுத்தப்படும். குறிப்பாக உலகின் பல பகுதிகளில் மனிதாபிமான மற்றும் ஏனைய ஆக்கபூர்வமான நோக்கங்களுக்காக அவை அவசரமாகத் தேவைப்படும்போது, இந்த முயற்சியில் செலவிடப்பட்ட வளங்கள் தேவையற்றவை.

கோவிட்-19 தொற்றுநோயின் தற்போதைய மற்றும் அழுத்தமான சவால்களின் கீழ், சமூக வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களின் தடையற்ற விநியோகத்தை உறுதி செய்வதை அரசாங்கத்தின் அடிப்படை கடமையாக நாங்கள் கருதுகின்றோம். எமது சவால்களை ஒப்புக்கொள்வதில் நாம் வெளிப்படையாக இருக்கின்றோம், பொறுப்பான மற்றும் ஜனநாயக அரசாங்கமாக, பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், மனித உரிமைகள், சமாதானம் மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பான முழு அளவிலான பிரச்னைகளில் உறுதியான முன்னேற்றத்தை அடைய அர்ப்பணிப்புடன் செயல்படுவோம் - என்று கூறினார். (ஐ)

## ஆணையாளரின்...

துள்ளார்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், எதிராகக் குரல் கொடுத்தவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையை தமது ட்விட்டர் பதிவில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் சிறுபான்மையினர் பாதுகாப்பில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்பதை தாம் தொடர்ந்தும் வலியுறுத்துவதாக சாரா ஹல்டன் மேலும் தெரிவித்துள்ளார்.

## 136 பேர்...

யுள்ளார்.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 11 ஆயிரத்து 567 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 136 பேரில் 60 பெண்களும், 76 ஆண்களும் உள்ளடங்குகின்றனர். (இ)

## அநுராதபுரம்...

வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ருவிட்டர் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

செப்ரெம்பர் 12ஆம் திகதி மாலை அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற சிறைச்சாலைகள் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர், தமிழ் அரசியல் கைதிகளை வரவழைத்து, அவர்களில் இருவரை அவருக்கு முன்னால் மண்டியிட வைத்தார் என்பதை உறுதிப்படுத்த முடியும்.

இராஜாங்க அமைச்சர் அவர்களை நோக்கி தனது தனிப்பட்ட துப்பாக்கியைக் காட்டி அவர்களை அந்த இடத்திலேயே கொன்றுவிடுவதாக மிரட்டினார்.

இராஜாங்க அமைச்சரின் இந்த மோசமான நடத்தையை தமிழ் தேசிய மக்கள் முன்னணி மிகக் கடுமையான முறையில் கண்டிக்கிறது.

தமிழ் அரசியல் கைதிகள் ஏற்கனவே உலகிற்குத் தெரிந்த மிகக் கடுமையான சட்டங்களில் ஒன்றான பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டதால் அதிர்ச்சியடைந்தனர். இன்னும் மோசமாக அவர்கள் பல வருடங்களாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர், சிலர் பத்தாண்டுக்கும் மேலாக அவர்களுக்கு எதிராக எந்த ஆதாரமும் இல்லாமல் மற்றும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படாமல் தடுப்பில் உள்ளனர்.

அவர்களின் விவகாரங்களைக் கவனிக்கவேண்டிய இராஜாங்க அமைச்சர் அவர்களைக் கொல்வதாக அச்சுறுத்துவது அவர்களின் அச்சத்தை மேலும் மோசமாக்க முடியாது.

அமைச்சரை உடனடியாக பதவி விலகச் செய்ய வேண்டும் மற்றும் அவரிடமிருந்து அனைத்து பதவிகளையும் பறிக்க வேண்டும் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்துகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் சபை பயனற்ற தன்மையைப் புரிந்துகொள்ளவும், பொறுப்புக்கூறலைத் தவிர்க்கும் கலையில் தேர்ச்சி பெற்ற ஒரு தயக்கமில்லாத - அடங்காத அரசை ஒரு நிறுவனத்திற்குள் இலங்கையைக் கொண்டிருப்பதை அங்கத்துவ நாடுகளுக்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி சுட்டிக்காட்டுகிறது.

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் பார்வை இலங்கை மீது இருக்கும் போது ஒரு அமைச்சர் இப்படி நடந்து கொள்ள முடியும் என்பது, மனித உரிமைகள் சபையைப் பொறுத்தவரையில் அரசு எவ்வளவு கவலைப்படாமல் உள்ளது என்பதை மட்டுமே காட்டுகிறது. இலங்கையை ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு அப்பால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு அவசரமாக எடுத்துச் செல்லாவிட்டால், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நிலை இன்னும் மோசமடையும் - என்றுள்ளது.

## யாழ்.பல்கலை...

நாட்டில் இப்போதுள்ள கொரோனா - தனிமைப்படுத்தல் ஊரடங்கு நிலைமைகள் நீடிக்குமாயின், சுகாதாரத்துறையினரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய அதனை நிகழ்நிலையில் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும், தற்போதைய நிலைமைகள் வழமைக்குத் திரும்பிய பின்னர் பிறிதொரு நாளில் சம்பிரதாயபூர்வ பட்டமளிப்பு விழாவை நடத்தி மாணவர்களுக்குப் பதக்கங்களைப் பெற்றோர் முன்னிலையில் அணிவிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா ஏற்பாடுகள் தொடர்பில் ஊடகங்களின் ஊடாக மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு நேற்றுக் காலை, யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த ஊடகச் சந்திப்பின்போது பட்டமளிக்கு விழாக் குழுவின் தலைவரும் கலைப் பீடாதிபதியுமான கலாநிதி கே.சுதாகர் மேற்கொண்ட ஊடக விபரிப்பின்போதே இந்தத் தகவல்களை வெளியிட்டார்.

இந்த ஊடகச் சந்திப்பின்போது பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, பதிவாளர் வி. காண்டீபன், பட்டமளிப்பு விழாக் குழுவின் தலைவரும் கலைப்பீடாதிபதியுமான கலாநிதி கே.சுதாகர், பட்டமளிப்பு விழா நிகழ்வு முகாமைத்துவத் தலைவரும் தொழில் நுட்ப பீடாதிபதியுமான பேராசிரியர் திருமதி சிவமதி சிவச்சந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (இ - 03)

## இலங்கை தமிழ்...

வந்தவர். தொழிற்கட்சியின் ஒஸ்லோ இளைஞரணியில் இணைந்த அவர் அதன் தலைவியாகவும் பதவி வகித்தவர். 19 வயதில் (2007) ஒஸ்லோ மாநகரசபையின் பிரதிநிதியாகப் பெரும் ஆதரவுடன் தெரிவான அவர், 2015முதல் ஒஸ்லோ மாநகரசபையின் துணை முதல்வராகப் பதவி வகிக்கிறார்.

நோர்வேயின் மிகப்பெரிய கட்சியான தொழிற்கட்சி, தலைநகர் ஒஸ்லோவில் நிறுத்திய வேட்பாளர்களில், பிரதமர் பதவிக்கான வேட்பாளர் யூனாஸ் கார்ஸ்டூரவுக்கு அடுத்த இடத்தில் ஹம்சியை நிறுத்தியதன் மூலம் அவரின் பாராளுமன்றப் பதவியை உறுதி செய்திருந்தது. முழுநேர அரசியல்வாதியாக நோர்வேத் தமிழரிடையே இருந்து உருவாகியவர் ஹம்ஸி மாத்திரமே என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ்.மாவட்டத்தில்...

சோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று 262 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

யாழ்.மாவட்டத்தில் 36 பேர், முல்லைத்தீவு மாவட்டத்தில் 17, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை யில் 02 பேர், வவுனியா மாவட்டத்தில் 03 பேர் மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர், தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## தமிழர் முகம்...

பார்க்கின்றீர்கள்? என அவரிடம் கேட்கப்பட்ட போதே அவர் இவ்வாறு பதிலளித்தார். அவரின் பதில் வருமாறு:

"தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் பல விடயங்கள் பற்றி அவர் குறிப்பிடவில்லை என்பது மனவருத்தத்தைத் தருகின்றது. உதாரணத்திற்கு எமது காணிகளை அரசாங்கம் தந்திரமாகவும் பலாத்காரமாகவும் கையேற்றல் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஒரு வேளை பல உண்மையான தரவுகளை விபரமாக அவர் எதிர்பார்த்திருக்கின்றாரோ நான் அறியேன். அடுத்த மார்ச் மாதக் கூட்டத்திற்கு முன்னர் இவை பற்றி முழு விபரங்களை நாம் சேகரித்து அனுப்ப வேண்டும். எனினும் பல முக்கிய விடயங்களை அவர் தமது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

முதலாவதாக மக்களை வேவு பார்ப்பது அவர்களை அச்சுறுத்துவது மற்றும் மனித உரிமை மீறல் செயற்பாட்டாளர்களை, பத்திரிகையாளர்களை, காணாமல் போனோரின் குடும்ப உறுப்பினரைக் குறிவைத்து அவர்களை நீதிமன்றில் நிறுத்துவது போன்ற செயல்பாடுகள் தற்போது விரிவடைந்து மாணவர்களை, கல்வியாளர்களை, மருத்துவர்களை ஏன் மதத் தலைவர்களையும் அரசாங்கம் கண்காணிக்கத் தொடங்கியுள்ளது என்பதைக் கூறியுள்ளார்.

இரண்டாவதாக நல்லிணக்கம், பொறுப்புக் கூறல், மனித உரிமைகள் ப்றிப் பேசினால் போதாது நடைமுறையில் முன்னேற்றத்தைக் காட்ட வேண்டும் என்றுள்ளார்.

மூன்றாவதாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஏற்பாடுகளை உடனே தற்காலிகமாகவேனும் செயலிழக்க வைக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

நான்காவதாக 2019 ஆண்டு ஈஸ்டர் ஞாயிறில் நடந்த குற்றங்கள் சம்பந்தமான சூத்திரதாரிகளை உடனே கண்டுபிடித்து உண்மையையும் நீதியையும் நிலைநாட்ட வேண்டும் என்றுள்ளார். இப்படி பல விடயங்களை அரசாங்கம் செய்ய வேண்டும் என்று பொருள்படக் கூறியுள்ளார்.

மேலும், அரசாங்கத்திற்கு சார்பாகவும் பேசி தொடர்ந்து பொறுப்புக்கூறல் விடயத்தில் அவசியமான செயற்பாடுகளை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். மேலும் பொறுப்புக்கூறல் சம்பந்தமான விசாரணைகளை உடனே நடத்த உரிய குழுவை அமைப்பதாகவும் அதற்கான நிதிகளை அங்கத்துவ நாடுகள் பெற்றுத்தரவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

ஈழநாடு
Eelanadu




# நாட்டை கூறுபோட்டு விற்பனை செய்ய தொடங்கியுள்ளது அரசு

## சுதந்திர கட்சி பகிரங்க குற்றச்சாட்டு



**கொழும்பு, செப். 15**

**நாட்டையும் பொதுச் சொத்துக்களையும் பாதுகாப்போம் என்று கூறி ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசு, இன்று நாட்டைக் கூறு போட்டு விற்பனை செய்யத் தொடங்கியுள்ளது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தரான பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்தார்.**

கண்டியில் ஊடகங்களுக்கு நேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கை இன்று வாழமுடியாத நாடாக மாற்றம் பெற்று வருகின்றது.

கடந்த பொதுத் தேர்தலில், கொள்கை ரீதியாக எமது கட்சி தேசிய சொத்துக்களைப் பாதுகாப்பதற்காகவே முன்நின்று செயற்பட்டது.

வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ள பொதுச் சொத்துக்களை மீளக் கைப்பற்றுவதாகவும் அறிவித்திருந்தது.

துரதிர்ஷ்டவசமாக இன்று எதனை விற்பனை செய்யலாம் என அரசு வகை தேடுகின்றது.

வயல் நிலங்கள், பெறுமதியான காணிகள், தொழிற்சாலைகள் என அனைத்தையும் அரசு விற்பனை செய்து வருவதை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம்.

சொத்துக்களை பாதுகாப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசு சொத்துக்களை விற்பனை செய்கின்றது. கொழும்பு துறைமுகத்தைச் சேர்ந்த பகுதிகளும் இன்று விற்பனை செய்யப்படவுள்ளன.

இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். அதே போல் இன்று தொழிற்துறையில் நிபுணர்கள் பலரும் அரசின் குழுக்களிலிருந்து விலகி வருகின்றனர். மேலும், பலர் இலங்கையை விட்டு வெளியேறத் தொடங்கியுள்ளனர். வாழமுடியாத நாடாக இலங்கை மாறி வருகின்றது.

இந்த நிலைமையை மாற்றியமைப்பதற்காக கொள்கை ரீதியிலான மாற்றம் தேவைப்படுகின்றது" - என்றார். (இ)

# காணாமல்போனவர் சடலமாக மீட்பு!

*நாவலப்பிட்டி, செப். 15*

நாவலப்பிட்டி, டெலி வீதி பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் வீட்டிலிருந்து காணாமல்போயிருந்த நிலையில், அவரின் சடலம் மகாவலி ஆற்றிலிருந்து நேற்று மீட்கப்பட்டது. குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த எங்கலின் நாரங்கல (வயது 84) என்ற வயோதிபப் பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் கடந்த 10 ஆம் திகதி வீட்டிலிருந்து காணாமல் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# மரண அறிவித்தல்

| மலர்வு | | மலர்வு |
|---|---|---|
| 18 - 09 - 1945 |  | 12 - 09 - 2021 |

**திருமதி**

## ஜோசப் அன்ரனி பிரான்சிஸ்கா புஸ்பராணி

அச்சுவேலி புனித சூசை மாமுனிவர் கோவில் பற்றைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Paris Nanterre ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசப் அன்ரனி பிரான்சிஸ்கா புஸ்பராணி அவர்கள் கடந்த (12-09-2021) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் ஜோசப் செல்லப்பு - மாசிலாமணி முத்தம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஜோசப்குருசுமுத்து - மரியமணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற குருசுமுத்து ஜோசப் அன்ரனி (ஆமிச் சந்திரன்) அவர்களின் அன்பு மனைவியும், கிறிஸ்ரீனா அனுசா, கிறிஸ்சாந்தன், நிர்மலகாந்தன் ஆகி யோரின் அன்புத் தாயாரும், அன்ரன் செபஸ்ரியாம்பிள்ளை, மேறா, தீபா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற பிரான்சிஸ் செல்வராசா, அல்பேட் மேரி பிலோமினா, நாகலிங்கம் ஜோ. மனுவேல்பிள்ளை (தம்பி மாமா) மற்றும் வேதா செல்வத்தம்பு நீற்றா மலர், யேசுதாசன் அருமைநாயகம் ஞானசீலி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்ற புஸ்பம் செல்வராசா, ஜோன் அல்பேட், வேதா செல்வத்தம்பு, யேசுதாசன் அருமை நாயகம், கில்லறிவில்பிரட் மகாராசா, வின்சன் சேச்சில், மற்றும் அருளானந்தம் கொறின் லெற்றீசியா, ஜெயராசா யூலியஸ்பற்றீசியா, வலன்ரைன் நோபேட் கருணாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், மகி, நிக்கி, காலெப், ஸ்ரெசி, வைஸ்ணவி, வெற்றி (ஜெயிஸ்) ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

பார்வைக்கு
Thursday, 16 Sep 2021 9:00 AM
Funérarium de Nanterre 42 Chem. des Cendres, 92000 Nanterre, France

திருப்பலி
Thursday, 16 Sep 2021 10:30 AM
Eglise Sainte-Marie-des-Fontenelles 30 Av. Felix Faure, 92000 Nanterre, France

நல்லடக்கம்
Thursday, 16 Sep 2021 11:30 AM
Crématorium Du Mont Valérien 104 Rue du Calvaire, 92000 Nanterre, France

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு:*
**கிறிஸ்சாந்தன் - மகன் +33629232900**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# பொருளாதார அமைச்சர் யார்?

## கேள்வி எழுப்புகின்றது எதிரணி

*கொழும்பு, செப்.15*

நாட்டில் இன்று பொருளாதார அமைச்சர் யார் என்று தேடிப் பார்க்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இன்று தரவு மோசடி குறித்து விவாதிக்கப்படுகின்றது. இவ்விடயம் குறித்து திலிப் பீரிஸூம் கருத்துரைத்துள்ளார். நிறுவனங்களில் பெயர்கள் அழிக்கப்பட்டுள்ளன என்று கூறுகின்றனர். ஒரே மருந்து வெவ்வேறு நிறுவனங்களின் பெயர்களில் வந்தன எனவும், அதன்மூலம் மோசடிகள் நடைபெறுகின்றன எனவும் அவர் கூறினார்.

2017ஆம் ஆண்டு ஔடத மாபியாக்களுக்கு வேலைகளைப் பிரித்துக் கொடுத்தனர். தற்போது ஔடத மாப்பியாக்கள் தலை தூக்கியுள்ளன. இதன் பின்னணியிலுள்ளவர்களை நாம் கண்டறிய வேண்டும்.

சர்வதேசத்தைக் காரணம் காட்டி நெஞ்சில் அடித்துக்கொண்டே இந்த அரசு ஆட்சிக்கு வந்தது.

தற்போது கொழும்புத் துறைமுகத்தில் உள்ள ஒரு நிலம் சீனாவுக்கு இரண்டு துண்டுகளாகப் பிரித்துக்கொடுக்கப்படவுள்ளன.

13 ஏக்கர் நிலப்பரப்பு எவ்வித ஆரம் பக்கட்டணம் இன்றி வழங்கப்படவுள்ளது.

தற்போது இந்த அரசை ஜிம்பிம்மே நடத்தி வருகின்றார். யுவானுக்கு அடிபணிந்து தற்போதைய அரசு ஜின்பிங்குக்கு தேவையான வகையிலேயே செயல்பட்டு வருகின்றது. இந்த அநியாயச் செயற்பாட்டுக்கு எதிராக செயல்பட வேண்டியது அவசியம்.

தற்போது ஒவ்வொரு மின்னுற்பத்தி நிலையங்களையும் வேறு வேறு நாடுகளுக்கு வழங்குகின்றனர். இவ்வாறு வழங்கும்போது அந்த நாடுகளுக்கு ஏற்ற வகையில் செய்றபட முடியும்.

தற்போது எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில கடன் வாங்கவுள்ளார். அந்த கடனைப் பெற்றுக்கொடுக்கவிருப்பவர்கள் 7 சதவீதம் கமிசனைப் பெறவுள்ளனர்.

இந்த அரசு வட்டி முதலாளி நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது.

தற்போது இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக அஜித் நிவாட் கப்ரால் வரவுள்ளார். நிதி அமைச்சராகப் பஸில் ராஜபக்ஷ வந்தவுடன் அனைத்தும் சரியாகிவிடும் என்று கூறினார்கள். ஒன்றும் நடக்கவில்லை. இந்நிலையில் தற்போது அஜித் நிவாட் கப்ரால் வரும் வரை காத்திருக்கின்றனர்.

நாட்டில் இன்று பொருளாதார அமைச்சர் யார் என்று தேடிப்பார்க்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. வெவ்வேறான கருத்துக்களைக் கூறி வருகின்றனர்" - என்றார். (இ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.09.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி



7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்: டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-கே.ஜி.எப்,அயன் திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**
07.00 மணி : பாரதீ-சட்டத்தரணி அம்பிகை



08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
09.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## ஸ்ரீ

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம் திங்கள்)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்ட்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு